Registered No. M. 878.

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 2. } 1911ஞு நவம்பர்மீ 15உ
விரோதகிருதுஞு ஐப்பசிமீ 30உ { பகுதி 7.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S } பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை :
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

2 4 8

பொருளடக்கம்.

	பக்கம்.
மோக்ஷம் அல்லது வீடு பெறல்—ப. நா.	௨௩௩
மநுஷ்ய யத்நமும் ஈசுவர கிருபையும் } ரா. இராகவையங்கார்	௨௪௬
துறவு—மு. வேங்கடசாமி நாட்டார்	௨௪௮
ஆகாசக் கப்பல்களுக்கும் புகைக்கூண்டுகளுக்கும் விபத்து } ப. நா.	௨௫௩
புறாக்களின் மூலமாய் போட்டகிராப் எடுத்தல்—ப. நா.	௨௫௪
முத்துக்களை ஆக்கி வளர்க்கும் முறை—ப. நா.	௨௫௫
ஓய்வுநேரத்தை ஒழுங்காய்க் கழிக்கும் முறை—சி. வ.	௨௫௯
சுமதி என்னும் உத்தமியின் சரித்திரம்—எஸ். சாமிநாதையர்	௨௫௭
சமாசாரம்—பத்திராதிபர்.	௨௬௩
பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம்.	

The Swadeshi Life Assurance Co., Ltd.,
BOMBAY.

ஹெட் ஆபீஸ் பம்பாய்.

மூலதநம் ரூபாய்—பத்து லெக்ஷம்.

Honourable லல்லுபாய் ஸாமல்தாஸ் அவர்கள்—சேர்மேன்.

மிஸ்டர் ஜியார்ஜ் கிங் துரை அவர்கள் F. F. A. F. I. A. (London) } ஆக்சுவரி

K. சுப்பிரமணிய அய்யரவர்கள் B. A. F. S. A. A. (London) J. P. ஹானரரி பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் F. M. U. F. B. U. பம்பாய் } மானேஜர்.

எம். கே. இராஜகோபாலசாரியார் அவர்கள் F. T. S., பப்ளிக் அகவுண்டெண்டு and ஆடிடர் of "K. R. Chari Brothers" West Tower Street, Madura. } சென்னைராஜதாநியின் சீப் ஏஜண்டு. Chief Agents.

எல். புருஷோத்தமநாயுடுகோரு F. T. S. எடமணல், சீயாழி தாலூகா ஏஜண்டு.

ஜில்லா, தாலூகா, டவுன் ஏஜண்டுகள் தேவை.

தாராளமான கமிஷன் கொடுக்கப்படும்.

வரலாற்று விளம்பரம் (Prospectus) முதலியவைகளுக்கு கே. ஆர். சாரி பிரதர்ஸ், மதுரை என்னும் விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்:

Please Compare our rates and conditions before insuring your life with any other company.

Apply for Agencies and other particulars to
Messrs. K. R. CHARI BROTHERS,
West Tower Street, Madura.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

249

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2. } 1911ஆம் நவம்பர் மீ 15உ
விரோதகிருதுஆம் ஐப்பசி மீ 30உ { பகுதி 7.

மோக்ஷம், அல்லது வீடு பெறல்.*

நன்றாய் ஞானம் கடந்துபோய் நல்லிந்திரியம் எல்லாம் ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பிலதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங்கு இன்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே.—திருவாய்மொழி.

1. கிறீஸ்து மதத்தின் ஆரம்பகாலத்தில் ஞான முறையில் பயின்ற ஞானிகள் சிறுபான்மையோர் (Gnostics) நடைபெற்ற காலத்தில், புநர் ஜந்மம் உண்டு என்ற கொள்கையானது கிறீஸ்துவர்களுள் இருந்தது. ஒரு பிறப்பில் ஒருவன் செய்யும் நன்மை அல்லது தீமையானது, முறையே நித்திய சுகம், அல்லது நித்திய துக்கமுள்ள கதியை உண்டுபண்ணு மியல்பினது என்ற இப்போது வழங்குகின்ற அறிவில்லாத சித்தாந்தம் அப்போது நடைபெற ஆரம்பிக்கவில்லை; மோக்ஷமும் நரகமும் ஒரு ஜந்மத்தின் வினைப்பயனாக ஏற்படும் என்ற கொள்கை தலைப்படவில்லை. பின்பு, அச்சிறுபான்மையான ஞானிகள் பொய்த்துப்போய், அறிவிலிகளான பெருங்கூட்டத்

* Based upon Mrs. Besant's article on "Liberation or Salvation" in the "Theosophist" Vol. XXXI Part ii.

தார்கள் தலைப்பட, "புநர்ஜந்மம் உண்டு" என்ற கொள்கையானது அம்மதத்தினின்றும் விலகிப்போயிற்று. அந்த ஞாநிகள் இருந்த காலத்தில், மோக்ஷம் என்பதற்கு உயர்நலமமைந்த கம்பீரமான அர்த்தம் ஏற்பட்டிருந்தது. மோக்ஷம் பெற்றவன் என்றால் ஈசுவர ஸாக்ஷாத்காரம் பெற்றவன்; மெய்யுணர்வுள்ளான்; மரணதர்மத்தை ஜயித்தவன்; நித்தியத்வத்தை அடைந்தவன்; ஸ்வர்க்கத்தில் தானும் ஒரு முக்கியஸ்தனானவன்; பிறப்பை அறுத்தவன் என்பதாம். ஆகவே ஆதி கிறிஸ்துமத ஸம்பிரதாயப்படிக்கும், நம்முடைய ஸநாதந தர்மமான ஹிந்துமத ஸம்பிரதாயப்படிக்கும், பௌத்தமத ஸம்பிரதாயப்படிக்கும், மோக்ஷம் என்பது ஒரே பொருளுடையதுதான். யாதொரு வித்தியாசமுமில்லை ஹிந்து, பௌத்த, கிறிஸ்து மதங்கள் மூன்றிலும் "ஜீவன், விகாச (Evolution) அபிவிருத்தி முறையில், பலபடிகளில் ஏறுகிறான். கடைமுறையில் பூர்ணம் பெறுகிறான்; "நான்" என்ற பிரஞ்ஞாபூமியைத் தாண்டுகிறான்; தன்னை அறிகிறான்; மெய்யுணர்வு பெறுகிறான்; பிரஞ்ஞையுடன் ஈசுவரனில் ஒன்றுபடுகிறான்; மருள் நீக்கம் பெறுகிறான்; தெள்ளிய ஞாநம் அடைகிறான்; இவ்வித சித்தாந்தம் நிகழ்ந்தது.

2. இக்காலத்திலோவென்றால், ஹிந்துமதத்திலும், கிறிஸ்து மதத்திலும் மேற்கண்ட உயர்நலம் அமைந்தமொழி பெரும்பாலும் இரஸம் அற்றுப்போயிற்று; வெறுமையான வார்த்தையாக மாத்திரம் இப்போது நிகழ்கின்றது. இப்போது, கிறிஸ்துவர்கள் மோக்ஷம் என்றால் நரக அநுபவத்தைத் தப்பி சுவர்க்கலோகம் புகுதல் என்பதாக அர்த்தம் கொள்ளுகின்றார்கள். சாதாரணமாய் ஹிந்துக்களும் மோக்ஷம் என்பது, தன்னைத் தான் அறிதல், மெய்யுணர்வு பெறுதல் என்ற உயர்ந்த லக்ஷியத்தைக் கைவிட்டு இடமாற்றம் பெறுதல் அதாவது பூலோக துக்க நிவிர்த்தி என்பதாக மதிக்கிறார்கள்.

3. ஒரு பெரியார் அடியில் வருமாறு 'மோக்ஷம்' என்பதற்குப் பொருள் கொள்ளுகிறார். "மோக்ஷம் என்றால் இடம்பெயர்தல் அன்று, நிலைமைகளின் (Conditions) மாறுதல் அன்று, அவன் அவன் மநோநிலையின் மாறுதலாம்". உண்மை இவ்விதமாகச் சுரு

க்கமாக விருக்கிறது. மோக்ஷம் என்றால் நம்முள்ளம் மாறுதல் அடைதலாம். வெளி விஷயங்களின் மாறுதலன்றும். மோக்ஷம் என்றால் வெளி விலங்கை வெட்டுதலன்று. உள்ளத்தில் நம் சுதந்தரத்தை அறியும் மெய்ஞ்ஞான ஜோதி அமையுறும் நிலைமையாம். இருட்டான சிறையில் அடைக்கப்பெற்றவன் ஆத்மாவை யறிந்தால், அதாவது, மெய்யுணர்வு பெற்றால் உண்மையில் கைதியல்லன். வீடு (மோக்ஷம்) பெற்றவனாவன். ஏக சக்கிராதிபதியாயினும், தன்னை (ஆத்மாவை) யறியாமல் அநாத்மாவசமாகி மருளில் உழலுவானாகில், உண்மையான கைதியாவன். இதனாலன்றோ ஸ்ரீ கிருஷ்ணபகவான், கீதையில் 'ஒருவன் உலகவாழ்வு எவ்விதமாக நிகழினும், என்மேல் இடையறாத பூர்ணபக்தி யுள்ளவனாயிருப்பானாகில் அவன் என்னிடமே வசிக்கிறான்" என்று உபதேசித்துள்ளார். அவன் உயர்ந்த அரசனாயிருப்பினும், சிறு குடியானவனாயிருப்பினும், வலியனாயினும், வறுமையனாயினும், வைதிகனாயினும், லௌகிகனாயினும், புரோஹிதனாயினும், வியாபாரியாயினும், இவ்வந்தஸ்துக்கள் எல்லாம் நிலைவரமானவையல்ல, மாறுதல் உடையனவாம். எவன் தன்னிடம் அதாவது ஆத்மாவின்கண் ஜீவிக்கின்றானோ, ஆத்மாவை அறிகின்றானோ, அவனே ஸ்வதந்தரமுடையவன்; தன்னிஷ்டமுடையவனாவன். எவன் தன்னை (ஆத்மாவை) அறிகிறானில்லையோ, அவன் பந்தத்திற்குட்பட்டவனே. ஸ்வதந்தரமுடையவன் நித்தியமான வஸ்துவில் ஸ்திரமான பிரஞ்ஞை உள்ளவனாவன். பந்தப்பட்டவனோ காலகதிக் குட்பட்டவனாகி உடைந்த மரக்கலம்போல், சிந்நாபிந்நப்பட்டு ஸம்ஸாரம் என்ற ஸமுத்திரத்தில் தத்தளிக்கிறான்.

4. மோக்ஷம் என்பது, ஆத்மாவை (தன்னை) அறியும் நிலைமை. தன்னை நித்தியன் என்று அறிதல், மெய்யுணர்வு பெறுதலாம். தான் சத்தியம் என்றும், உலகத்தில் சரீரம் பெறுதலினால் ஏற்படும் அத்தோற்றம் அல்லன் என்றும், அறிதல் தான் உண்மையான உணர்வு. மனிதனோ நீடித்தகாலமாய் உலக சம்பந்தமான சரீரத் தோற்றங்களுடன் ஒன்றுபட்டு, அத்தோற்றங்களை 'தான்' என்று மதிமயங்கி ஒழுகுகின்றான். தேஹோஹம் என்ற பாவனை உள்ளவனாக இருக்கிறான். பிரகிருதி என்ற மாயா சமுத்திரத்தின் ஜலங்களில் தன் பிரதிபிம்பத்தைப் பார்த்து மயக்கம்

கொண்டு "அதோ நான்" என்ற விபரீத பாவனை கொண்டு நடை பெற்றிருக்கின்றான் விஷய சுகங்களை நுகர்ந்தான்; ருசி கண்டான்; அதனால் உலக வஸ்துக்களின்மேல் ஆசைகொண்டான்; அவைகள் மூலமாக விஷயானந்தம் பெற்றான்; அவ்விஷயானந்தத்தில் பற்றை வைத்தான்; பேராசை அவனை அடிமை கொண்டது; கோபம் அவனை வசப்படுத்திற்று; செல்வம் அவனுக்கு விலங்கிட்டது; உருவங்களின் வனப்பு அவனை அதன் மயக்கத்திற்குள்ளாக்கிற்று; நாநாவிதமான ரூபங்களை நோக்கி அவைகளிடம் ஆசைமேலிட்டு, அவைகளைப்பற்றிப் பிடிக்க முயன்றான்; ஆனால் அவை இவன் பிடிப்பிற்குள் அகப்படவில்லை; அவை வெறுமையான தோற்றங்களாயின; நிழலைக் கட்டியணைத்தல் போலாயிற்று; மருளான இருளில் அலைந்தான்; தங்குமிடம் காணமல் தயங்கினன்; கடைமுறையில் தன்னுள்ளத்தில் ஞான ஒளி உதயமாயிற்று; நிழல்போன்ற தோற்றங்கள் போயின; ஸ்வதந்தரனானன்; தன்னிஷ்டம் பெற்றான்.

5. அதனால், மோக்ஷம் என்றால் ஒரு குறித்தலோகத்தில் வஸித்தலன்று; அது எவ்வளவு நுண்ணிய திரவியங்களால் அமையப் பெற்றிருப்பினும், அதின்கண் ஜீவித்தலன்று; எவ்வளவு தீர்க்க காலமானாலும், அது கால வரம்புக்குட்பட்டு வஸித்தலன்று; எவ்வளவு ஆநந்தம் பயக்கும் தன்மையதாயினும் அது வெளிநோக்கி நடைபெறும் பிரஞ்ஞா நிலையுமன்று; ஆனால் மோக்ஷமென்பது பிரபஞ்சத்தின் நாநாவிதமான நாம ரூபங்களை விட்டு விலகி, அந்தர் முகப்பட்டு ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்தலாம்; மெய்யுணர்வு பெறுதலாம். "ஈசுவர ராஜ்ஜியம் அதாவது உண்மையான ஸ்வாரஜ்ஜியம் உன்னிட முள்ளது" என்றார் கிறிஸ்து என்பாரும்.

6. ஆத்மாவை அறியும் முறையில் முதல்படி உபநிஷத்துக்கள் உப்தேசிக்கிற பிரகாரம் "தீயவழிகளினின்று விலகுதல்"

𑌨𑌾𑌵𑌿𑌰𑌤𑍋 𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌿𑌤𑌾𑌨𑍍𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑍋 𑌨𑌾𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃

𑌨𑌾𑌶𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍋 𑌵𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑍈𑌨𑌮𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍

—கடஉபநிஷத்.

இதன் பொருள்:—பாப கர்மங்களினின்று ஒழிவடையாதவனும், இந்திரியங்களை அடக்காதவனும், சிதறும் சித்தத்தை ஒருமைப்படுத்தாதவனும், மனச்சாந்தமில்லாதவனும், வெறுமையான விஞ்ஞானப்பயிற்சியால் மட்டும் இந்த ஆத்மாவை அடையமாட்டான்.

'தீமை செய்யாமலிருப்பேன்' எனத் தீவிரமாய்த் தீர்மானம் கொள்ளுதலும் அத்தீர்மானத்தைத் தவறாது அநுஷ்டித்தலும் முக்கியமானது. இஃது இன்றேல் இந்த ஆத்மஞானமுறையில் ஒருவன் அடிவைக்க இயலாது. பாபவழியில் நடைபெற்று பாபச்சேறு பூசின பாதங்கள் இம்மார்க்கத்தில் அடிவைக்கமுடியாது. இந்த மார்க்கத்தின் லக்ஷியமான பரம் என்று சொல்லப்படும் உயர்நிலை பெறுதலுக்கு ஒரேவழி. இந்த ஞானமுறையான ஏணியின் அடிப்படியை அழுக்குள்ள பாதங்களால் மிதிக்காதே. அதில் கவனமாயிரு, அதின் எந்தப்படியையும் அழுக்குள்ள பாதங்களால் மிதிக்கிறவன் கதி அந்தோ! என்ன சொல்லுவேன்! கொடிய துன்பத்திற்குள்ளாவான். இம்மார்க்கத்தை நாடுகிறவன் அநேகம் தடவை தடுமாறுவான்! அநேகம் தடவை பிசகுவான்! அநேகம் தடவை கீழே விழுவான்! ஆயினும் அவன் தைரியமாய் மனம் தளராமல், களங்கமற்ற சுத்தசித்தமுடையவனாக இருத்தல் வேண்டும். * காந்த ஊசியானது எவ்விதமாக அசைப்பிக்கப்பெற்றாலும் எப்போதும் வடக்கேயே நோக்கிக் குறித்துநிற்றல்போல, இம்மார்க்கத்தில் நடைபெற விரும்புவோன் ஒரே மனத்தினனாய் † நன்மையையே தன் லக்ஷியமான, கடைப்பிடியாகப் பற்றவேண்டும். ஒருவன் சித்தம் தூய்மையாகவும், நேர்மையாகவும் இருப்பின், அவன் தீயகர்மம் செய்தாலும் சத்திய நெறியில் நிற்பவனாக மதிக்கப்படுவான். "எவ்விதம் தீவிரமாய் நினைப்பானோ உறுதியாக அவ்விதம் ஆவான்" என்பது திண்ணம். "தீயவழிகள்" என்பவை ஸ்தூல சரீரத்தைப்பற்றியவை மாத்திரமல்ல; தீய கர்மங்களும் தீய எண்ணங்களும் இதனுள்வரும். எண்ணங்களைத் தீமைப்பற்றினின்று விலக்குக. மனமறிந்து தீய விஷயத்தில் ஒரு நிமிஷம் கூட சிந்தனை கொள்ளற்க. நல்ல வாஸனையுள்ள ரோஜாப்புஷ்பங்களிருக்க, அந்தோ! எத்தனை வண்டுகள் துர்நாற்றமுள்ள உச்சிஷ்டங்களை நாடிச்செல்லுகின்றனவே! சுத்தமான விஷயத்தில்

* மௌனவாக்கு, 23-ம் பக்கம், 43-ம் பத்தியைப் பார்க்க.

† ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றேபுகும் கதியில்லை, நுட் சித்தத்து
நின்றே நிலைபெற, நீர்நினைந்து உய்மினே—திருமந்திரம்.

மநம் நிற்குமானல், தீய விஷயங்களின் உற்பத்தி ஸ்தாநம் தானே அடைக்கப்பெறும். தீய எண்ணங்களை உண்டுபண்ணாமலும், தூண்டாமலும், அவைகளை ஆதரவு செய்யாமலும் இருப்பின், அவ்விதமே தீய கர்மங்கள் தாமே அடங்கும்; மநம் சுத்தம் பெறும். அதாவது, மநோமயகோசம் தூய்மையாயின், கர்மங்களும் தூய்மையாகும். இவ்வண்ணம் முமுக்ஷுவானவன் (மோக்ஷத்தை நாடுபவன்) தீவிரமாய்த் தன்னைச் சுத்தம்செய்யற்பாலன்; § "தீவினையகற்று," "நன்மைகடைப்பிடி" என்பவை முதுமொழி.

7. இப்படி முயன்று "நன்றே செய்யப்" பழகவேண்டும். ஆத்ம ஸாக்ஷாத்காரம்பெற விரும்புவோன் தீயவை ஒழித்தல் மாத்திரம் போதாது. எவ்விதம் தீயசெயல் வேற்றுமை பாவத்தை ஸ்திரப்படுத்தவும், விருத்திப்படுத்தவும் இயலுமோ, அவ்விதமே, நன்மைசெய்தல் ஒருமை உணர்வை (ஏகீபாவத்தை) ஸ்திரப்படுத்தவும், விருத்திசெய்யவும் கூடும். தீய செயலுக்கு மூலம் பகைமை. பகைமை வேற்றுமைப்படுத்தும் தன்மையது, பிரிக்கும் இயல்புடையது. நற்செயலுக்கு மூலம் அன்பு. அன்பு சேர்க்கும் இயல்புடையது; ஒருமைப்படுத்தும் தன்மையது. எவ்வளவுக்கெவ்வளவு முமுக்ஷுவானவன் பிறர்க்குதவி செய்கிறானோ, பிறர்நலத்தைக் கருதுகிறானோ, பிறர் சுகதுக்கங்களைச் சிந்திக்கிறானோ, அதனால் தன் சக்திகளைப்பிறர்நிமித்தம் உபயோகிக்கின்றானோ, அவ்வளவுக்கவ்வளவு விவேகம் அவனிடம் உதயமாகிப்பிரகாசிக்கும். (1) விவேகம் என்பது இந்த ஞாந மார்க்கத்துக்கு முதன்மையான ஸாதநம். முமுக்ஷுவானவன் அவனது விவேகத்தினால் தன்னைச் சுற்றுமுள்ளவைகளை யாராய்வான். நித்தியம் இது, அநித்திய மிதுவென, உணர்வான். ஸத் இது, அஸத் இது எனத் தெளிவான். இவன் ஞாநம் தெளிவுபெறவே, அநித்திய வஸ்துவை வெறுப்பான். அஸத்தானதை விரும்பான். தனக்கு முன் ருசியாகவிருந்த உணவு இப்போது வாயிற் கசக்கும். தான் முன் மிகப்பிரியத்துடன் பற்றின விஷயங்கள் இப்போது தன் கைவிட்டு நழுவிவிடும். தான்

§ தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப்பால்—குறள்.

மிக்க காமத்துடன் முன் தழுவிய ரூபங்கள் நிழல்போல் பொய்யாகிப்போம்; சூந்நியமாகிவிடும். இவ்விதமாக அவன் மநத்தின்கண் உபேக்ஷை ஜநிக்கும். பின்பு அதுவே சாந்தமான இனிமையான வைராக்கியமாக அமையும். (2) இதுவே இரண்டாவதான தகைமை. பின்பு வைராக்கியம் பலப்பட, மநத்தைச் சுவாதீநம் செய்கிறான். அது போனவழியில் விடாமல், அதை நேர்மையாக நடத்துகிறான். (3) இதுவே சமம் என்று சொல்லப்படுகிறது. மநம் வசப்படவும், ஆசையையும் செயலையும் நேர்மைப்படுத்தவும், இந்திரிய நிக்கிரஹம் ஏற்படும். (4) இதுவே தமம் எனப்படும். இவ்விதம் நடைபெறவே மநச்சாந்தம் உண்டாகும், அப்போது மெல்லிய மௌந மொழியான (Voice of the Silence) நாதம் கேட்கும். ஆத்மாவின் மஹிமையின் ஓர் அம்சத்தின் க்ஷணிகக் காக்ஷி தோன்றும்.* அவ்வநுபவத்தால் "நான் பந்தமுடையவன்" என்ற உணர்வு நீங்கும். "நான் என்றும் முக்தன்" என்ற உணர்வு உண்டாகும். அதுவே ஆநந்த வுணர்வு. நொய்மை நீங்கித் தீரத்தன்மை எழும். ஒரு க்ஷணமாவது அடியில்வரும் கௌதமபுத்தரின் உபதேசத்தின் உண்மையை அறிவான். "நீவிர் பந்தமுடையவர்களல்லர். விஷயங்களின் கண்ணுள்ள ஆத்மா சுகிர்தமே ஜீவர்களுக்குள் உள்ள ஹிருதயநிலை உபசாந்தமே."

8. பின்பு, முன்போல் இருளான மேகம் மறுபடியும் தன் மநத்தை மூடும். தோன்றின காட்சியும் மறையும். ஸம்ஸாரமான இருள் மூடும். ஆயினும் ஒருகாலத்தில் தன்னுள்ளொளிக் காட்சியைக் கண்டானன்றோ? அது வீண்போகாது. இக்காட்சி கண்ட காலம் முதல், இவனுடைய ஞாந ஒழுக்கமுறை இலகுவாய் நடைபெறும். அவ்வநுபவத்தின் சிந்தனையால் உலக விஷயங்களை விரஸமாய் மதிக்கின்றான்; துச்சமாக நினைக்கின்றான். வைராக்கியம் பலப்படுகிறது; ஸ்திரமாய் அமைகிறது. இது போலி வைராக்கியமன்று, ஒரு சமயம் இருத்தலும், மற்றொரு சமயத்தில் மறைதலுமாக இருப்பதன்று. இப்போது முமுக்ஷுவானவன் பொறு

* கேநோபநிஷத்தில் அந்த போதநிலை மின்னலைப் போன்றது, என உபதேசிக்கப்பட்டிருக்கிறது.

மை என்ற சம்பத்தைத் தன் சீலத்தில் அமையப்பெறுகிறான். இதுவே (5) உபரதி என்னப்படும். இக்குணத்தால் சகிப்பு கொண்டவனாய்ப் பிறருக்கு உதவி புரிகிறான். பின்பு (6) திதிக்ஷை என்ற சம்பத்து அவனிடம் அமைகின்றது. அபரிமிதமான சகிப்புள்ளவனாகிறான். தான் ஈசுவர அம்சமுள்ளவனாகவிருக்கிறான் என்ற நன்னம்பிக்கை உண்டாகியிருக்கிறமையால், (7) சிரத்தை என்ற சம்பத்தும், இந்நம்பிக்கை உறுதிபெறவே, (8) மநச் சமாதாநம் என்ற உயர்நலமுள்ள சம்பத்தும் அவனுக்கு ஏற்படுகின்றன. இனி அவன் நினைப்பெல்லாம், ஈசுவரனுடன் இரண்டறக்கலத்தல் என்பதேயாம். இப்போதுதான் முமுக்ஷுவாகிறான். சிரேயஸ் மார்க்கத்தின் உயர்நலம் அமைந்த வாசற்படியில் நிற்கின்றான். அவ்வாசலுக்கு அப்பால் இன்னும் நாலு படிகளிருக்கின்றன. மோக்ஷம் பெறுமுன், முமுக்ஷுவானவன் இப்படிகளிலேறி ஏறி இவைகளைத் தாண்டவேண்டும்; மனிதனைப் பந்தப்படுத்திக் கடைமுறையில் தங்கிநிற்கின்ற தச (10) க்கட்டுகளான ஹிருதயக்கிரந்திகளை வெட்டி எறிகிறான்.*

அவையாவன:—(1) தான் என்ற அபிமாநம் (2) சந்தேகம் (3) வீண்பக்தி (4) ஆசை (5) வெறுப்பு (6) ஸ்தூலசரீரம் எடுத்தலின் அவா (7) ஸூக்ஷ்மசரீரம் அமூர்த்தமானசரீரம் எடுத்தலின் அவா (8) கர்வம் (9) மநச்சஞ்சலம் (10) அவித்தை. அவித்தை நீங்கவே, கண்களை மூடிக்கொண்டிருந்த மூட்டம் அவிழ்ந்து விழுந்தாற்போல, பிரமை நீங்கும், யநக்கண் பிரகாசம் பெறும் "நான் ஸ்வ

---

* 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌶𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃।

𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇॥

—முண்டக உபநிஷத்.

இதன் பொருள்:—பரமாயும் அபரமாயுமுள்ள அந்த பரமாத்மாவின் தர்சநத்தால், ஹிருதயபந்தங்கள் பேதித்து விட்டுப்போகின்றன. ஸர்வ சந்தேகங்களும் நாசமாகின்றன. இந்த ஞாநியின் ஸஞ்சித ஆகாமிய கர்மங்கள் நசிக்கின்றன.

தந்தரன்", என அறிகிறான். எப்போதும் ஸ்வதந்தரனாக இருந்திருக்கிறதாக உணருகிறான். மோகத்தால், தான் மதிமயங்கி இருந்ததாகத் தெரிந்துகொள்ளுகிறான். ஒரு மாயாவியானவன் "அசையாமல் நிற்கப்பாலன்" என்று ஒருவனை மயக்கம் பெறும்படி செய்தால் அம்மயக்கச் சொல்லால் கட்டுண்டு தன்னறிவு இழந்து இருப்பவன் போல, (Under the influence of hypnotism) நாம் ஜீவனாக வெளிவந்த காலமுதற்கொண்டு அநாதியான நம்முடைய ஜீவயாத்திரையில் (Our human pilgrimage) நாம் பந்தமுடையவர் என்ற பிரமை சிந்தனையால் மதிமயக்கம் கொண்டு உழலுகின்றோம். ஆத்மாவான திருஷ்டாவினிடம் ஒருவித மாற்றமுமில்லை. அந்த மயக்கமான மருள் நீங்கவேண்டும். அது நீங்கினால், நாம் பந்தமுடையராக (பத்தராக) இருந்தவரே முக்தராக ஆகின்றோம் எனவும், ஸ்வதந்தர முள்ளவரெனவும் அறிகின்றோம். மோக்ஷம் என்ற நிலைமையைப்பெறுதலுக்கு, அவித்தை நீக்கம் ஒன்றுதான் பெறவேண்டியது; வேறு ஒன்றும் வேண்டற்பாலதன்று*. உடனே ஒளியைக் காண்கின்றோம்; என்றும் ஸ்வதந்தரனான ஆத்மாவின் பெருமையை உணருகின்றோம். எப்போதும் நாம் ஸ்வதந்தரர்கள், முக்தர்கள், அந்நியர் அந்த நிலைமையை நமக்கு அளிக்கவில்லை. அந்நியர் அந்நிலையை நாமே பெறுதலுக்குத் தடைசெய்பவும் இபலார். ஆனால் நீடித்த அநுபவத்தாலும், முயற்சியாலும் நாம் பந்தமுடையவரல்லர், கட்டுண்டவர் அல்லர் என்ற உணர்வைப் பெறுகின்றோம். கட்டுண்டோம் என்ற மருள் நீங்கும். சுத்திசெய்தல் எல்லாம் ஒளியை மறைக்கின்ற கண்ணாடியைப் பற்றியதேயாம். சுத்தியால் முன்னில்லாத விளக்கு ஏற்றப்படுவதில்லை. என்றும் இருக்கின்ற பிரகாசமே வெளித் தோன்றிடச் செய்தலேயாம் ஆகவே, உண்மையில், முயற்சி மோக்ஷத்திற்கு நேரான காரணமன்று. பந்தப்பட்டவனாக இருக்கின்றோம் என்ற மயக்கத்தை நீக்குதல் தான் அதன் காரியம். எப்பொழுதும், எவ்விடத்திலும், எந்நிலையிலும், ஆத்மா தன்னைத் தானே அறியலாம், தன் ஸ்வதந்தரத்தை நிலைநிறுத்தலாம். உண்

* இருள்நீங்கி இன்பம்பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு—குறள்.

மையில், படிகள் வேண்டுவதில்லை; நிலைமைகள் வேண்டுவதில்லை, காலம் வேண்டுவதில்லை. ஆத்மா நித்தியன், என்றும் ஸ்வதந்தரன்.*

9. மோக்ஷம் என்ற பதமும், அதன் பல பரியாய பதங்களும் தற்காலம் நிகழ்கின்ற சமய முறைகளில், நிலைமைகள் மாற்றத்தையும், ஸ்தாந பேதத்தையும், அவஸ்தா பேதத்தையும் குறிக்கும் சொற்களாகக் கொள்ளப்படுகின்றன. கிறீஸ்துவன் விண்ணுலகம் தனக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை கொள்ளுகிறான். அதனால் அவன் மோக்ஷம் பெறுகிறதாக எண்ணுகிறான். ஹிந்துவானவன் உலக ஆசைகளை அறுத்தால், மோக்ஷம் பெறலாமென்று மதிக்கிறான். மேற்கண்ட இருவரும் அவர் அவர் நினைக்கிறபடி ஒருவித ஆநந்தமுள்ள ஸ்தாநத்தைப் பெறலாம். அந்த ஸ்தாநத்தில் நீண்ட காலம் ஆநந்தாநுபவம் அடையலாம். ஆனால், அது மோக்ஷமன்று; வீடு பெறலன்று. பூலோக, புவர்லோக, ஸ்வர்க்கலோக சுகங்களை ஒருவன் விரும்பாமல் இருக்கலாம். அவைகளை வெறுக்கலாம். ஸ்வர்க்கலோக இன்பங்களைத் தள்ளிவிடலாம். ஸ்தூலசரீரத்தை நீத்த மாதிரியாக சூக்ஷ்ம சரீரங்களான காம மாநஸிக சரீரத்தையும் நீக்கிவிடலாம். அவைகள் சம்பந்தமான லோகங்களையும் தாண்டலாம். அவைகளின் ஆசைகளையும் துறக்கலாம். இந்நிலையில் அவன் மநத்தைக் கவரும்படியான யாதொரு விஷயங்கள் இல்லை தான்; ஜீவாத்மா என்ற பக்ஷி வேடன் வைத்திருந்த வலையினின்று ஓடிப்போய்விட்டதுதான்; இனி இந்த மூன்று லோகங்களிலும் அது திரும்பக் கூடுகட்டப்போவதில்லைதான்; இம்மாத்திரம் தான், இதுவரையில்தான், இவன் ஸ்வதந்தரம் நிகழ்வதாகும். பிரஹ்மஞாநப் புத்தகங்களில் பிரஸ்தாபிக்கப் பெறும் அரூப மாநஸிகலோகத்தில் அதாவது மஹர், ஜநோ லோகங்களில் தியாநபரனாய் அநேக கல்பகாலம் தங்கலாம். பின்பு, வெகு கல்பங்களிற்குப் பிறகு, மஹர் ஜநோ லோகங்களுங்கூட ஒரு காலத்தில் போய்விடும், அழியும். அவைகளின்கண்ணுள்ள வாஸிகள் ஒரு நீண்ட தூக்கம் கொள்ளுவா

* அறிவாய் அறியாமை நீங்கி அவனே
பொறிவாய் ஒழிந்து எங்குந்தானான போதன்
அறிவாய் அவற்றினுள் தானாய் அறிவன்
செறிவாகி நின்றஅச் சிவனுமாகுமே—திருமந்திரம்.

ர்கள். தங் மனோகல்பித ஈசுவரத்தியானபரனாகவும் அந்தத் தியானத்தில் மூழ்கினவனாகவும் இருக்கலாம். பின்பு அந்தத் தபோ லோகமும் சங்கோசம் பெறும், அழியும். இந்நிலைகளில் எல்லாம் ஒருவன் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்காமல் போவானாகில், தன்னைத் தானறியானாகில், மெய்யுணர்வு பெறானாகில், இனி யாதேனும் ஒருவித சூக்ஷ்மத் தன்மையான பிரகிருதி சம்பந்தமான லோகத்தில், சரீரம் எடுப்பான். இது நிச்சயமானது. அந்தந்தப் பிரஞ்ஞாநிலைக்குரிய ஒவ்வொரு மனிதன் பிரஞ்ஞை ஒரு பிரகிருதி சம்பந்தமான உபாதியைப்பற்றி யாதேனுமொரு தொழிலைச் செய்யும். அப்பிரகிருதித் தன்மையின் கட்டுவிட்டுப் பிரளய நிலையைப் பெற்றால், அவ்வுபாதியும் அழியும். அப்போது அப் பிரஞ்ஞாசம்பந்தமான ஜீவன் அதைவிட சூக்ஷ்மமான உபாதியைப் பற்றிக்கொண்டு யாதொரு தொழிலின்றி உறங்கும், ஒருவித ஸுஷுப்தி அவஸ்தையைப் பெறும். பின்பு வேறு ஒரு பிராகிருதலோகம் தோன்ற, அதில் அந்தப் பிரஞ்ஞைக்கு ஏற்ப ஒரு உபாதி ஏற்படுமாகில், பின்பு அவ்வுபாதியைப் பற்றிக்கொண்டு அஜ்ஜீவன் தொழிற்படும், வேறு ஒரு சரீரம் எடுப்பான். தன்னை ஆத்மாவென்று அறிந்தால்தான், மெய்யுணர்வு பெற்றவனாவன். அதுவரை, திரும்பத் திரும்பச் சரீரமெடுக்கப்பாலனே.

10. இதை வாசிக்கின்ற சிலர் நினைக்கலாம் "மோக்ஷம் என்பது வெகு தூரத்திலுள்ளது; அதைப்பற்றி நாம் இப்போது சிந்தனை கொள்ளவேண்டுவதேன். தினந்தோறும் நடைபெறும் உலக விஷயங்களுக்கும் மோக்ஷத்திற்கும் சம்பந்தமில்லை. மோக்ஷத்தைப் பற்றிய அவ்வுயர்நலமமைந்த எண்ணங்கள் இப்போது உலகயாத்திரையில் உப்புக்காகுமா புளிக்காகுமா? வீணே!" என மதிக்கலாம். இது சரியன்று. ஏனென்றால் உண்மையில் நாம் ஒவ்வொருவரும் ஈசுவராம்சம் உள்ளவர்கள். நாம் ஆத்மா; ஆத்மா நம்மொவ்வொருவரிடமும் இருக்கிறான். எப்போது தீமையை விட்டுத் திரும்புகின்றோமோ, அப்போது ஆத்மாவை அறியும் முறையில் ஒரு படி ஏறுகிறோம், ஆத்மசூரியனை மூடியிருக்கும் கண்ணாடியைச் சுத்தம் பண்ணுகிறோம். சுயநலம் தவிர்த்துப்பிறர்க்குப் பிரியத்துடன் ஒரு கைங்கரியம் செய்வோமாகில், "ஒரே ஆத்மா உள்ளது" என்ற ஒருமையுணர்வைப் பெறக்கிட்டுகின்றோம். சுயநலத்தைத் துறத்தலினால் ஐக்

கும் ஆநந்தம், ஆத்மாரூபமான ஆநந்தத்தின் ஓர் திவலையாம். கீழான சுகத்தைத் துறந்து மேலான சுகத்தை நாடும்போதெல்லாம் அல்லது, சோம்பலுக்கு அநுகூலமான எளிதான மார்க்கம் இருக்க அதைத் துறந்து, அறமுறையான உத்தரவாதத்தைக் கொண்டுசெலுத்தக் கஷ்டப்படும் போதெல்லாம், ஸத்சங்கற்பம் கொள்ளுகிறோம். சங்கற்பித்த காரியத்திற்கு பங்கம் நேரிட, அதனால் வருத்தமுறாமல் மநம் களிப்புறுமாகில் வைராக்கியம் நம்மிடமமைந்திருக்கிறது என்று அறிவோம். செய்கின்ற காரியத்தில் மநம் சிதறாமல் ஒரே திருஷ்டியாக மநம் நிலைத்து நின்றால் மநத்தைச் சுவாதீநப்படுத்தும் முறையில் பயிலுகின்றோம் என்று நினைப்போம். கோபத்தால் எழும் தீய சொல்லைத் தடுப்போமாகில் கர்மத்தை ஆளும் தன்மையை (Control of action)ப் பெறுகிறோம். பிறரிடம் குற்றம் கண்டுபிடித்தலைத் தவிர்த்தால் நம் பொறுமை(உபரதி)நலம்பெறும். உலக வாழ்க்கையின் இன்றியமையாத கஷ்டநிஷ்டூரங்களைச் சந்தோஷத்துடன் பொறுத்துவரச் சகிப்பு என்ற உயர்ந்தசீலம் (திதிக்ஷை) நமக்கு உண்டாகும். நித்தியதபஸும், தியாகமும், மநச்சாந்தத்தையும், அதனால் மநச்சக்தியையும் வர வர உண்டுபண்ணும்.* அதனால் "நம் உள்ளத்தின் கண் இறைவன் உளன்" என்ற அறிவு உண்டாகும். அதனால் உயர் நலம் அமைந்த மநச்சாந்தகுணத்தை அநுஷ்டாநத்தில் கொண்டுவரப் பல சந்தர்ப்பங்கள் திநந்தோறும் நேரிடும். இச்சந்தர்ப்பங்கள் நம்மைச்சுற்றி நிகழ்வனவாகும். நாம் அவைகளைக் கவநிக்கிறோமில்லை. அவைகளை நழுவவிடுகிறோம். நாம் நடத்தும் ஒவ்வொரு தொழிலிலும், நாம் செய்யும் ஒவ்வொரு உத்தியோக முறையிலும் சுயநலம்துறந்து, பிறர் நலம் பயக்கும் கர்மம் செய்யப் பல சமயங்கள் நேரிடுகின்றன. அவைகள் நம்மை ஈசனை நோக்கிய மார்க்கத்தில் சேர்ப்பிக்கும். ஒரு அறிஞர் அடியில் வருமாறு சொல்லியிருக்கின்றார்.

"உத்தியோகம் செய்யும் சாலையிலும், நியாயஸ்தலத்திலும், கடைத்தெருவிலும், துறைமுகத்திலும், வியாதிஸ்தன் படுக்கையின்

---

* முத்திக்கு வித்துமுதல்வன் தன்ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரம் தானாதல்,
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே—திருமந்திரம்.

அருகாண்மையிலும், குழந்தைஇருக்கும்தொட்டிலிலும், கிழவர்படுக்கும் கட்டிலிலும், ஆத்ம சாக்ஷாத்காரத்தை அடையலாம்". தன்னைத்தான் அறியலாம். மெய்யுணர்வு பெறலாம். மோக்ஷத்தைப் பெறலாம். இஸ்லாம் மதத்தினரான ஒரு பெரியார் சொல்லியபடி நன்மை செய்தலுக்குப் பெரிய காரியத்தின் வரவை எதிர் பார்க்கவேண்டாம். ஆ! நண்பனே! பெரிய கைங்கரியமாவது நம் சமீபத்தில் உள்ளதுதான். சாதாரணமாய் உலகவாழ்வில் நற்காரியங்கள் செய்தலுக்கு எத்தனையோ அருமையான சமயங்கள் நேரிடுகின்றனவே! சூரிய அஸ்தமனமாகும்சமயத்தில் தோன்றும் கம்பீரமான கண்காட்சியைவிட உலகத்தில் மேலான வைபவம் உண்டோ? ஆயினும் தினந்தோறும் அது நேரிடுவதால் அதிக சாதாரணமாயிற்று; அதனால் அதை கவனிக்கிறோமில்லை. அதை அலக்ஷியம்பண்ணுகிறோம். அதுபோலவே ஆத்மாவும் அதன் நோக்கான மார்க்கங்களும் என்று அறி. "நீயே அம்மார்க்கம்" என்றார் மற்றொரு பெரியார். "உள்ளே நோக்குக, நீ புத்தனாக இருக்கிறாய்" என்றார்.* மற்றொருவர் "அந்த வாக்கு உன் சமீபத்திலிருக்கிறது உன் வாயில் உள்ளது உன்னுள்ளத்தில் உள்ளது" என்றார் வேறொரு ஞானியார் "என் சகோதரனே! (உன் மனக்) கண்ணைத்திறந்து விழி, நீ பார்ப்பாய்" †

ப. நா.

---

*பராஞ்சி கானி வ்யத்ருணத் ஸ்வயம்பூஸ் தஸ்மாத் பராங் பச்யதி நாந்தராத்மந்।
கச்சித் தீர: ப்ரத்யகாத்மாநமைக்ஷதாவ்ருத்த சக்ஷுரம்ருதத்வமிச்சந்।

—கடஉபநிஷத்.

இதன் பொருள்:—பரமேசுவரர் வெளியில் பிரவிர்த்திக்கிற இந்திரியங்களை வெளிநோக்காய்ச் சிருஷ்டித்தார்; அதனால் ஜீவன் வெளிநோக்கியே பார்க்கிறான், அந்தராத்மாவைப் பார்க்கிறானில்லை. அறிஞன் யாதாமொருவன் மரணமற்ற நிலையை விரும்பினவனாய், வெளி விஷயங்களைப் பார்க்காமல் அந்தராத்மாவைப பார்க்கிறான்.

† முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்—திருமந்திரம்.

மநுஷ்ய யத்நமும் ஈச்வர கிருபையும். *

——(o)——

இவ்வரியதொடர் இப்பரதகண்டத்திலுள்ள மஹாராஜர் ஒருவருடைய குலவிருதாகும். அம்மஹாராஜா இக்குலவிருதான தொடருக்குமேல் இதனுண்மைப்பொருளை யாரும் எளிதிற் கண்டுகொள்ளும்படி, ஒரு பெருங்கடலில் ஒரு பாய்மரக்கலம் ஓடுவதாகச் சித்திரித்துத் தம்முடைய சாஸநங்களில் வழங்குகின்றார். இதனால் உலகை ஒரு கடலாகவும், மநுஷ்ய யத்நத்தை ஒரு பாய்மரக்கலமாகவும், அம்மநுஷ்ய யத்நம் பயனெய்துவதை அம்மரக்கலம் கரையடைவதாகவும், மரக்கலம் நன்று செல்லுதற்குக் காரணமான காற்றை ஈச்வரக்ருபையாகவும், ரூபகஞ் செய்துள்ளாரென்று தெளியலாம். இன்னும் பிறவியைக் கடலாகவும் மநுஷ்ய யத்நத்தைப் பாய்மரக்கலமாகவும் மோக்ஷத்தைக் கரையாகவும் அதனை அடைதற்குக் காரணமான ஈச்வர கிருபையை நல்ல காற்றாகவும் வரைந்துள்ளாரென்றலும் நன்று பொருந்தும். மரக்கலம் இயங்குதற்கும் கரைசேர்தற்கும் காற்று இன்றியமையாததாயினாற்போல, முயற்சி நிகழ்தற்கும் பயனெய்தற்கும் ஈச்வர கிருபையு மின்றியமையாததாம். மரக்கலம்போல மக்கள் முயற்சி அற்பமாய்ப் பிறிதொன்றானியங்க வேண்டிய நிலையிலுள்ளது. காற்றுப்போல ஈச்வரகிருபை வலிதாய் இம்மரக்கலம்போன்ற தொன்றையே யல்லாமலின்னும் பலவகைப் பொருள்களை இயக்கச் செய்வதாயுள்ளது. காற்று எங்ஙனம் மரக்கலத்தாலுண்டாகாததாய் மரக்கலத்துக்கு முன்னே உள்ளதாவதோ, அங்ஙனமே ஈச்வரகிருபையும் மநுஷ்ய யத்நத்தாலுண்டாகாததாய் அதற்கு முன்னரேயுள்ளதாம். மரக்கலம் காற்றானியங்குவதன்றி மரக்கலத்தாற் காற்றியங்காதவாறுபோல, மக்கள் முயற்சியெல்லாம் இறைவன் அருளால் நிகழ்தலன்றி முயற்சியாலருள் நிகழாதென்றுங் கொள்ளப்படும். எப்படி மரக்கலமானது தனது பாய்களால் வியாபகமான காற்றை முகந்துகொண்டு அக்காற்றுச் செல்லும் வழியிலே அக்காற்றாலே செல்லுமியல்பினதாகின்றதோ, அப்படியே மநுஷ்ய யத்நமும் எங்குமொக்க வியாபகமான ஈச்வர கிருபையை நல்ல நினைவுகளால் முகந்துகொண்டு அவ்வருள் வழியிலே அவ்வரு

* இஃது இராமநாதபுரத்தில் சென்ற ஜூலை மாதத்தில் கூடிய பிரஹ்மஞானசபையில் வாசிக்கப்பட்ட உபந்யாஸத்தின் சுருக்கம்.

ளாலே நிகழுமியல்பினதாகின்றது. மரக்கலம் ஓடக்கருதும்போ தெல்லாம் அதற்கு அநுகூலமாகக் காற்றுப் பெருகி வீசவேண்டும் நியதியில்லையாயினாற்போல, மக்கள் முயற்சி நிகழும்போதெல்லாம் ஈச்வரகிருபை பெருகி யொழுகவேண்டுமென்றும் நியதியும் இல்லை யாம். மரக்கலம் காற்று நன்று வீசும்வரைக் காத்திருக்குமாறு போல, மக்கள் முயற்சியும் ஈச்வர கிருபைக்குக் காத்திருக்கும்படி நேரினும் நேரும். நோயினாற்கண் குருடுபெட்டானொருவன் ஔஷத ஸேவைகளால் ஒருநாட் பாதிராத்திரிப் போதிற் குருடு நீங்கினு னாயினும், பொருள்களைக்கண்டு தெளிதற்கு சூரியோதயத்தைக் கரு திக் காத்திருக்குமாறுபோல இதனையுங்கொள்க. குருடு நீங்கச் செய்த முயற்சி சூரியோதயத்தை உண்டுபண்ண வியலாது சூரியன் எய்திபக்கால் அதனொளி கோடற்கே இயல்வதுபோல மநுஷ்ய ப்ரயத்நமும் ஈச்வரகிருபையை உண்டுபண்ண வியலாது. கிருபை எய்தியவிடத்து அதனாற் பயன் கோடற்கே இயல்வது என்றவா றும். இவையும் இவைபோன்ற பல நுணுக்கங்களும் இக்குலவிரு தொடுகூடிய சித்திரத்தாலறியலாம். ஈச்வரகிருபைக்கும் மநுஷ்ய ப்ரயத்நத்துக்குமுள்ள ஸம்பந்தத்தை எல்லாரும் எளிதிலுணர்ந்துய் யும் வண்ணம் பூதத்தாழ்வார் என்னும் பிரஹ்மஞாநியார்

“ தனக்கடிமைப் பட்டது தானறியா னேனும்
மனத்தடையவைப்பதாம் மாலை—வனத்திடரை
ஏரியாம்வண்ண மியற்றுமிது வல்லால்
மாரியார் பெய்கிற்பார்மற்று ” என்னும்

திருவெண்பாவால் நன்று விளக்கியருளினர். மநுஷ்ய ப்ரயத்நமெல் லாம் காடுமேடான தரையை ஏரியாக்கும் அவ்வளவே யென்றும், ஈச்வரகிருபை அதன்கண் மழைபெய்து நிறைப்பதுபோலும் என் றும் எனத் தெளிக.

ரா. இராகவையங்கார்,

ஸேதுஸம்ஸ்தாந வித்வான்.

துறவு.

அநாதியே பாசத்தொடக்குடைய ஆன்மகோடிகளெல்லாம் தத்தம் கர்மத்திற்கேற்றவாறு கடவுளின் ஆணையால் சுவர்க்கம், மத்தியம், பாதலம் என்ற மூன்றுலகங்களிலும் தேவர்முதல் ஸ்தாவரம் ஈறாயுள்ள யோநிகளிற் பிறந்திறந்துழன்று கொள்ளிவட்டம் கறங்கெனத்திரிதர நிற்கும். பரிபாகமின்றிச் சிலையாய்க் கிடக்குங் காலமுமுண்டு.

இவ்வுண்மை :—

“ புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவரசங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத் தேனெம்பெருமான்.”

என்று ஸ்ரீ மாணிக்கவாசகப்பெருமான் அருளிய வாசகத்தாற்றெள்ளிதினுணரப்படும். அங்ஙனம் தநுகரண புவநபோகங்களைப் பெற்று வினைப்பயன் நுகர்ந்துவருமிடத்தும் அந்நுகர்ச்சி கர்மங்களையறவே ஒழிக்காது ஆகாமியவினையை விளைத்துவிடுதலின் பலகோடி பிறவிகள் செல்லினும் கர்மங்கள் மேலும் மேலும் வளர்ந்துகொண்டேயிருக்கும்.

மரத்திற்கு வித்தும் வித்திற்கு மரமும் அநாதியே காரணங்களாதல் போலச் சரீரத்திற்கு வினையும் வினைக்குச் சரீரமும் காரணங்களாவனவாம். இதனை நல்லிசைப் புலவராகிய கூலவாணிகன் சாத்தனாரும்

“ வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
* * * * யாக்கை எனப் புலப்படுத்தினர்.

அநித்தியமாய் மூவகைத் துன்பத்தையுடையதாயுள்ள சரீரத்தோடுயிர்கள் பிறந்து பிணிப்பட்டு மூத்து இறந்துழலுந் துன்பத்தை யெண்ணுந்தோறும் நெஞ்சங் கலங்குகின்றதே! ஆ! இவ்வல்லல் வாழ்க்கையும் ஓர் வாழ்க்கையோ? அதுபற்றியன்றே,

"நான்படும் பாடு சிவனே யுலகர் நவிலும்பஞ்சு
தான்படு மோசொல்லத் தான்படு மோவெண்ணத் தான்படுமோ."

எனக் கதறுவாராயினர் ஆன்றோருமென்க. இனி அங்ஙனமாய பிறவிப்பிணியினின்றும் நீங்குதற்குரிய உபாயந்தான் யாதென்றுரைப்போம். காரணமாய வினையுள் வழியும் காரியமாய பிறவி நீங்காது. வினைகளும் விருப்பு வெறுப்புக்கள் ஏதுவாக நிகழ்கின்றன. விருப்பு வெறுப்புக்களும் மெய்ப்பொருளல்லாதவற்றை மெய்ப்பொருள்களாகக் கருதி, யான், எனது என்றபிமானிக்கும் அகங்கார மமகாரங்களினால் உண்டாகின்றன. அத்தகைய விபரீத ஞானத்தை யுண்டு பண்ணுவதுதான் அவித்தை அல்லது ஆணவம் என்று கூறப்படும். அதுவே எல்லாத் துன்பங்கட்கும் வித்தாகும். அது செம்பினிற் களிம்புபோல அநாதியாகவே உயிரைப் பந்தித்து அறிவைத் தடை செய்து நிற்கின்றது. இனி மேற்கூறிய அகங்கார மமகாரங்களும் விருப்பு வெறுப்புக்களும் ஒழிந்தாலன்றி இருவினையும் ஜநந மரணங்களும் ஒழியாவாம்.

இவை ஒழியவேண்டின் நல்லாரோடு பழகுதலும் மெய்ந்நூல்களைக் கேட்டலும் சிந்தித்தலும் புரிதல் வேண்டும். அவற்றான் மெய்யுணர்ந்தவழி ஐம்புலவாசைகளையும் அறவே யொழிக்கவேண்டும். விஷயாநுபவத்தின் பொருட்டு வைத்திருந்த பொருள்களெல்லாவற்றையும் ஒருங்கே விட்டுவிடவேண்டும். அங்ஙனம் விடுதலையே துறவு அல்லது சந்நியாசம் என்பர்.

நமது பட்டினத்தடிகள் முதலாயினோரே அப்படித் துறந்தவராவர். எல்லாவற்றையும் ஒருங்கு விடக் கூடாவிடினும்

"யாதனின் யாதனி னீங்கியா னோதல்
அதனி னதனி னிலன்." என்னுந் திருவாக்கினுண்மையைச்

சிந்தித்து ஒரோவொன்றாகவேனும் விட்டுவருவாராயின் அவ்வவற்றான் வருந் துன்பத்தினின்று நீங்குவர்.

"பிறந்தோருறுவதுபெருகியதுன்பம்
பிறவாருறுவதுபெரும்பேரின்பம்
பற்றின்வருவதுமுன்னதுபின்ன
தற்றோருறுவதறிக.

என்னும் மணிமேகலையின் வாக்கையும் சிந்திக்கக்கடவர்.

இனி அகத்திற் றுறவாதிருந்தே துறந்தார்போல் வேடந்தாங்கி வஞ்சித்தொழுகுபவர் கதி யென்னெனின், அவர் கதி அதோகதி தான். புலியின்றோலைப் போர்த்துக்கொண்டு பயிரைமேயும் பசுப் போல்வார் அவர். இல்லிலிருந்து தீங்கிழைப்பவரினும் அதிபாதகரா வர் அவரென்க. துறவிற்கு வேடமே பிரதானமன்று. இல்லின் கண் மனைவி மக்களோடிருப்பவரினுள்ளும் துறவோருளர். ஆதி மஹரிஷிகள் ஆசிரியர் அகத்தியனர், திருவள்ளுவனர் முதலியோர் அத்தகைய துறவோரேயாவர். தேவரும் "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா, னிந்திரனே சாலுங் கரி." என்னுங் குற ளில் முனிவரது வலியை யுணர்ந்துகொள்ளுதற்கு, ஐந்தவியாது சாபமெய்திய இந்திரனைச் சான்றுகூறு முகத்தானே கௌதமரை ஐந்தவித்த முனிவராகப் புலப்படுத்தினர். அவர் அகலியை யென் னும் மனைவியையும் சதாநந்தரென்னும் புதல்வரையுமுடைய ராயி ருந்தும் ஐம்புலவாசைகளை யொழித்த துறவோராகக் கருதப்பட்ட மையால் யாங்கூறியது ஆசிரியர் திருவள்ளுவனர் கருத்தேயா மென்க.

மற்றும் பெரியோர்கள் எவ்விதக் கருமங்களைச் செய்துகொண் டிருப்பினும் தாம் அவற்றில் தாக்கற்று நிற்பார்கள். தமக்கொரு பயன் கருதி யாதொன்றுஞ் செய்யார்கள். யாம் செய்கிறேமென்று மெண்ணர்கள். "அவனன்றியோரணுவுமசையாது" என்பதே அவர்கள் உள்ளக்கிடக்கை. அக்கருமங்கள் அவர்களைப் பந்திக்கும் வலியுடையனவுமல்ல. அக்கருமங்கள் தாமே அவர்களைவிட்டு வில கிப்போம். கண்ணபிரான் அருச்சுனற்குச்செய்த கீதை யுபதேச முமிதுவே.

இனி ஐம்புலங்களினுஞ் செல்லாது மநம் ஒடுங்கி நிற்றலே யமையும்; அவித்தையுந் தவிர்ந்துவிடும்; அதுவே முக்தியுமாகு மென்னில், கூறுதும்—மனமொடுங்கிய மாத்திரையானே உயிர் அவித்தையினின்றும் நீங்காது. உயிருக்கு யாதானு மொன்றைப் பற்றி நிற்றலேயியல்பு. எல்லாவற்றையும் விட்டுத் தனித்துநில் லாது. இறைவனுவான் பந்தத்தினும் முத்தியினும் தமக்குபக ரிக்கு முறைமையையுணர்ந்து அவன் திருவடியையேபற்றிச் சமாதி

யிலிருக்க ஏனைய பற்றுக்களெல்லாம் நீங்கும். சிற்சத்தியின் பிரகாசத்தால் அவித்தை வலிகுன்றி நீங்கும். இறைவனோடு அத்துவிதக்கலப்புண்டாகும். இதனை—

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு." எனத் திருவள்ளுவனாரும்,
"ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ."

என்று சிவஞானச்செல்வராகிய நம் தாயுமானசுவாமிகளும் திருவாய் மலர்ந்தருளினமையாற் றெளிக. உயிரானது யாதேனுமொன்றைச் சார்ந்து எங்ஙனம் பாவிக்கின்றதோ அப்பாவனையின் வண்ணமாய் நிற்குமியல்பினது. இதனையே தாயுமானசுவாமிகள்

"யாதொன்று பாவிக்க நானது வாதலா
லுன்னை நானென்று பாவிக்கினத்துவித
மார்க்கமுறலாம்" என வெளிப்படுத்தினர்.

அருணந்தியாசிரியரும்,

"கண்டவிவையல்லேனா னென்றகன்று காணாக்கழிபரமு நானல்லேனெனக் கருதிக்கசிந்த, தொண்டினொடு முளத்தவன்றானின்ற கலப்பாலே சோஹமெனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி, விண்டகலு மலங்களெல்லாங் கருடதியானத்தால் விடமொழியு மதுபோல விமலதையுமடையும், பண்டை மறைகளுமது நானானேனென்று பாவிக்கச்சொல்லுவதிப் பாவகத்தைக்காணே" என அருளிச்செய்வாராயினர்.

இதுகாறுங் கூறியவற்றால், உயிர்கள் அநாதியே பாசத்தொடக்குடையனவென்பதும், அவை நானாவிதமான யோநிகளிலும் மாறி மாறிப் பிறந்திறந்துழலும் என்பதும், பிறவிக்குக் காரணம் இருவினை யென்பதும், அவை யநுபவிக்குந்தோறும் வளர்கின்றன வென்பதும், அதனைச் சகிக்கலாற்றாது ஆன்றோர் கதறுவாராயினா ரென்பதும், வினையுள்ளவளவும் பிறவி நீங்காதென்பதும், வினைதான் விருப்பு வெறுப்புக்களால் நிகழ்வதென்பதும், அவைகளும் விபரீதவுணர்வினாலுளவாகின்றன வென்பதும், அவித்தையே (ஆணவம்) விபரீத வுணர்விற்குக்காரண மென்பதும், அவித்தையானது அநாதி

யாகவே உயிரைப் பந்தித்துள்ளதென்பதும், மெய்ந்நூற்கேள்வி முதலியவற்றானே விபரீத வுணர்வை யொழிக்கவேண்டுமென்பதும் அதுவே துறவாமென்பதும், பட்டினத்தடிகள் முதலாயினார் முற்றத் துறந்தவராமென்பதும், எல்லாம் ஒருங்குவிடக் கூடாவிடினும் ஓரோவொன்றாக விடுகவென்பதும், அவற்றால் துன்பங்குறைவுபடுமென்பதும், தவவேடத்தில் மறைந்து வஞ்சித்தொழுகுவது அதிபாதகமென்பதும், துறவிற்கு வேடமே பிரதானமன்றென்பதும், மனைவிமக்களோடிருப்பவருள்ளும் துறவோருண்டென்பதும், அகத்தியர், திருவள்ளுவர் முதலியோர் அத்தகையரென்பதும், 'ஐந்தவித்தான்' என்னுங் குறளால் அது வள்ளுவனார் கருத்தென்பதும், பகவத்கீதையின் கருத்தின்னதென்பதும், மநமொடுங்குதல் மாத்திரையானே அவித்தைகெடாதென்பதும், உயிர் ஒன்றைப்பற்றியே நிற்குமென்பதும், இறைவனடியைப் பற்றவே அவித்தையின் வலிகுன்றுமென்பதும், இறைவனோடத்துவிதக் கலப்புண்டாமென்பதும், உயிர் பாவனையின் வண்ணமாய் நிற்குமியல்பின தென்பதும், இறைவனை நானென்று பாவித்தல் ஸோஹம் பாவனை யென்பதும், கூறியனவெல்லாம் ஆன்றோர் பலர்க்குங் கருத்தாமென்பதும் பெறப்பட்டமை காண்க.

நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமு ஞானமுமே
யல்லாது வேறு நிலையுள தோவக மும்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே.

சுபம்.

மு. வேங்கடசாமி நாட்டார்.

நன்மொழி.

கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைக ளாலும் இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையில் ஒன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போல் பரந்த தன்றே.

—பாலகாண்டம் ஆற்றுப்படலம்.

ஆகாசக்கப்பல்களுக்கும்புகைக்கூண்டுகளுக்கும்விபத்து.

வாயுமண்டலம் பூமியைச்சுற்றி நாற்பத்தைந்துமுதல் 50மைல் வரை பரவியிருக்கின்றது. ஆனால், அதில் அமைந்துள்ள வாயு திரவியம் ஒரே மாதிரியாய்ப் பரவியுள்ளதன்று. பூமிக்குச் சமீபத்தில் நெருக்கமாகவும், உயர உயர மெலினமாகிக்கொண்டும் பரவியுள்ளது. வாயுவானது ஜலத்தைவிட அதிக நெகிழ்ச்சியுள்ளதாகவும் அதனால் லேசான வஸ்துக்களை மிதக்கும்படியாகச் செய்யும் தகைமையானதாகவு மிருக்கிறது. வாயுமண்டலத்தில் ஓட்டைகள் சில சில இடங்களில் காணப்படுகின்றனவாம். சிற்சில மாதங்களில் அதிக வெப்பத்தினால் எவ்விதக் காற்றுமில்லாத சமயத்தில் சுழல் காற்று ஏற்பட்டு வைக்கோல், எச்சிக்கலை, சில சமயத்தில் கோழி முதலியவைகளைக்கூடச் செங்குத்தாய் ஆகாயத்தில் கொண்டுபோகின்றன. இவ்விதமாகவே சமுத்திரத்திலும் திடீரென, ஜலமானது எழும்பி ஸ்தம்பம்போல் ஆகாசத்தில் கிளம்புவதையும் பார்க்கின்றோம். இதற்கு Water Spout என்று ஆங்கிலத்தில் பெயருள்ளது. இவ்விரண்டிற்கும் காரணம் ஒன்றே. அதாவது அதிக உஷ்ணத்தினாலாவது மற்றெந்தக் காரணத்தினாலாவது சிற்சில விடங்களில் காற்று திரவிய அணுக்கள் விலகி அகன்றுபோகவே, காற்று திரவியங்கள் சூந்நியமான பிரதேசங்கள் (vacuum) உண்டாகின்றன. அப்பிரதேசங்களைச் சுற்றிச் சலித்துக்கொண்டிருக்கும் வாயு திரவியங்கள் லேசான வஸ்துக்களைப் பூமியினின்று கிளப்பி, மேற்கண்ட சூந்நியப் பிரதேசங்களின் வழியாய் மேலே கிளம்பும்படி செய்கின்றன.

இத்தன்மையான சூந்நியப் பிரதேசங்கள் வாயுமண்டலத்தில் உயர்ந்த இடங்களிற் சம்பவிக்கின்றன. ஆகாசக்கப்பல்கள் அல்லது புகைக்கூண்டுகள் அப்பிரதேசங்களைச் சமீபிக்கவே, உயரத்தில் மிதக்கிறதற்கு ஆதாரமாயுள்ள ஆகாசத்திரவியம் பொய்த்துப் போகவே, அக்கப்பல்கள் சூந்நியப் பிரதேசங்களாகிய ஓட்டைகளின் வழியாய்ப் பூமியின் ஆகர்ஷண சக்தியின் கதி நோக்காய் மகாவேகமாய்ப் பூமியில் தாக்கிச் சிந்நாபிந்நமாகும்படி விழுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு இக்கப்பல்கள் அதிக பாரமுள்ளதாகவும் கனமுள்ளதாகவு மிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு பூமியில் விழும் வேகமும் அபாயமும் அதிகம். இச்சூந்நியப் பிரதேசங்களைச் சமீபிக்கிற ஆகாசக் கப்பல்களின் கண்ணுள்ள சாமான்களின் பளுவைக் குறைத்தல் நலம். இச்சூந்நியப் பிரதேசங்களை யணுகுங்காலத்தில் வாயுவின் பாரத்தை யளக்கும் யந்திரத்தில் (Barometer) உள்ள வாலரஸஊசியானது திடீரென்று முன்னிருந்த உயர்ந்த நிலையை விட்டுக் கீழிறங்கிச் சமநிலையைப் பெறுவதாகும்.

வாயுமண்டலத்தை ஜயித்தோமென்று இருமாப்புகொள்ளற்க என்று வாயுமண்டலத்திலுள்ள சூந்நியப் பிரதேசங்களான குழற்கம்பங்கள் அறிவுறுத்துகின்றன.

ப. ரா.

புறாக்களின் மூலமாய் போட்டகிராப் எடுத்தல்.

முற்காலத்தில் நமது நாட்டில் அன்னபக்ஷிகளின் காலில் கடிதங்களைக் கட்டித் தூதனுப்புவதுண்டு என நைஷதம்முதலிய காவ்யங்களாலறிகின்றோம். இக்காலத்தில் மேல்நாட்டாரது விசேஷ புத்திக்கூர்மையால் சிருஷ்டிப் பொருள்களின் தத்துவத்தை அறிந்து அவைகளை உபயோகப்படுத்தும் திறமையடைந்திருப்பதில், பின்வரும் செயல் மிக்க ஆச்சர்யத்தை விளைவிக்கக்கூடியதாயிருக்கிறது. புறாக்களினுதவியைக் கொண்டு போட்டகிராப்படம் எடுக்கும் வல்லமையை அறிந்திருக்கிறார்கள். ஒரு வைத்தியர் நோயாளிகள் இருக்குமிடத்திற்குப் புறாக்களைக் கடிதம் கொண்டுபோகும்படிப் பழக்கியுள்ளார். புறாக்களை இவ்வாறு வெளியே அனுப்புவதில் அவைகள் இன்ன மார்க்கமாய்ப் போயினவென்ற விவரம் அறியுமாறு அதன் மார்பில் ஒரு சிறு காமிராவை (நிழல்படம் எடுக்கும் கருவியைச்) சேர்த்துக்கட்டியும், அந்தக் காமிராவின் கண்ணுள்ள திராவகம் பூசிய உயிர்ப்புக் கடிதம் (Sensitive film) மேன்மேலும் தானே விரிந்துகொண்டு வரும்படியாக காற்றுள்ள ஒரு ரப்பர்ப் பந்தையமைத்து அதிலுள்ள காற்று வெளியேற ஏற, மேற்கூறிய உயிர்ப்புக்கடிதம் விரிந்துகொண்டு வரும்படியாக அமைத்தும் அனுப்புகிறார்கள். குறித்த இடத்திற்கு அப் புறாக்கள் போகுங்காலத்தில் மார்க்கத்திலுள்ள வஸ்துக்களின் நிழல்படங்கள் அக்காமிராவின் உயிர்ப்புக் கடிதத்தில் அமைகின்றன. பின்பு குப்தமாயுள்ள அப்படங்களை திராவகங்களால் வெளிப்படச் செய்கிறார்கள். இவ்விதமே சண்டை நடக்குங்காலத்தில் எதிரியின் சேனையின் வகுப்பையும் அமைப்பையும் உபாயங்களையும் போட்டகிராப்செய்து அவைகள் மூலமாய் எதிரியின் பலாபலங்களை யறியக்கூடுமென்று தெரிகிறது. இனி வருங்காலத்தில் கப்பல் விமானங்கள் அதிகப்படுவதினாலும் புறாக்கள் மூலமாய் நிழல் படங்கள் மேற்கண்டபடி எடுக்கக் கூடுமானதாலும் ஒரு தேசத்தார் மற்ற தேசத்தாருடன் போர் புரிவதில் ரகஸ்யமாய் உபாயங்கள் தேடுவது முடியாததாக விருக்கும். இது நலந்தான். போர்புரியும் மநத்தினவும், பைத்தியமும் வரவரக் குறையும். தீமையிலும் நலமுண்டாம். சண்டைக்கு அநுகூலமான பலவாறான யுக்திகளும் உபாயங்களும் மேன்மேலும் அதிகரிக்கச் சண்டையும் அற்றுப் போகுமாம்.

ப. நா.

முத்துப்பயிர்ச்சி.

மிகிமோடோவென்ற ஜப்பானியர் ஒருவர் முத்துக்களை உண்டு பண்ணும் முயற்சியில் பலன் பெற்றிருக்கிறார். முத்துச்சிப்பியின் முட்டைகள் ஏராளமாய் அகப்படக்கூடிய விடங்களில் சிறு கற்களைப் போடுவதால் முட்டையிடும் பூச்சிகள் அக்கற்களின்மேல் கருக்களை வைக்கின்றன. பெரும்பாலும் இவ்விதம் முட்டை வைக்கின்றதானது ஆழமில்லாத சமுத்திரத்தில் அதேயிடத்தி லிருக்கும் பக்ஷத்தில் குளிர்காலம் வரும்போது அக்கருக்கள் மரணமாக ஹேதுவாகின்றன. இச்சம்பவத்தை நீக்கற்பொருட்டு கருக்களமைந்த கற்களை எடுத்து ஏற்கனவே ஆயத்தம் செய்யப்பட்டிருக்கின்ற சமுத்திரத்தின் ஆழமான இடத்தில் அவைகள் வைக்கப்படுகின்றன. அவ்விடத்தில் அவைகள் தங்கிக் கருமலர்ந்து பூச்சிப் பருவத்தையடைந்து அபிவிருத்தியாகும்படி அவைகள் அவ்விதம் வைக்கப்படுகின்றன. பின்பு அவைகள் எடுக்கப்பட்டு அந்த ஒவ்வொரு பூச்சிக்குள் முத்துச்சிப்பியின் ஓரோர் சிறுதுண்டு புகட்டப்படுகின்றது. பின்பு அந்தச்சிறு துண்டைச்சுற்றி இனி முத்தாகக்கூடிய திரவியம் அமைகிறது. இதுவே பின்பு முத்தாக ஆகிறது. இம்முத்து உண்டுபண்ணும் தொழிலை ஜப்பான் தேசத்தில் ஸ்திரீகள் நடத்துகின்றார்கள். அவர்கள் சமுத்திரத்தில் குளித்துக் கருக்களமைந்த கற்களை எடுத்தும் அவைகளுக்கு வேண்டிய சிகிச்சைகளை முத்தாகப் பரிணமிக்கிறவரையில் செய்தும் வருகிறார்கள். புருஷரை விட ஸ்திரீகள் சுவாஸபந்தம் அதிககாலம் செய்ய சாமர்த்தியம் உள்ளவர்களாகத் தெரிகிறது. அதனால் ஜலத்தில் அதிககாலம் மூச்சைப்பிடித்துத் தங்குகிறார்கள். இதற்குக் காரணத்தை அடியில் வருமாறு விநோதமாக ஒருவர் வினவுகிறார். ஸ்திரீகள் அதிகப் பேச்சுக்காரிகளானதால் கும்பகம் செய்யும்சக்தி அதிகமாக உண்டாகின்றதோ? அல்லது புருஷர்கள் பலவாறாக மநம்நோகும்படி ஸ்திரீகளை வைதலும் ஹிம்சித்தலும் காரணமாக ஸ்திரீகள் மநச்சாந்தமும், பொறுமையும்பெற்று அதனால் கும்பகம்செய்யும் சக்தி அதிகரிக்கின்றதோ? எவ்விதமாயினும் சரி ஸ்திரீகளின் சக்தி முத்துக்கள் அதிகமா யுண்டுபண்ணுவதில் உதவுகின்றது.

ப. நா.

ஓய்வு நேரத்தை ஒழுங்காய்க் கழிக்கும் முறை.

272

—:o:—

இக்காலத்தில் பள்ளிக்கூடங்களுக்கும் நியாயஸ்தலங்களுக்கும், இவைபோன்று தொழிற்படுமிடங்களுக்கும் சில மாதங்கள் அல்லது சில வாரங்கள் ஓய்வுநாட்களாக ஏற்படுகின்றன. இத்தன்மையான ஓய்வுநாள் ஏற்படுத்தல் சரீரம் புத்தி முதலியவைகளுக்கு அநுகூலமானவை. இக்காலத்தில் உத்தியோகத் தொழிற்படுகின்றவர்கள் தொடர்பாய்த் தினம் தினம் செய்ததொழிலையே திரும்பத்திரும்பச் செய்கின்றார்கள். அதனால் மூளைக்குக் களைப்பும் மநத்திற்கு விரஸமும் உண்டாகின்றன. அதனால் உலக வாழ்க்கையில் உற்சாகம் உண்டாகாமல் மநம் மழுங்கி ஆயுளும் குறைவுபடுதற்கு ஏதுவாகின்றது. இவ்வித சம்பவம் நிகழாதிருக்கும் பொருட்டே ஓய்வுநாள் என்ற விவஸ்தை இக்கால நாகரிகத்திற்கேற்ப உண்டாயிருக்கின்றது. இந்த ஓய்வுநாளைத்தான் முன் தொழிற்பட்டிருந்த விடத்திலேயே செலவழிக்காமல், புதிய விடங்களுக்குப் போதலும், புதிய விஷயங்களைப் பார்த்தலும் கேட்டலும், புதிய தொழிற்படுதலும் நலத்தையுண்டாக்கும். தான் இருந்த இடத்தைவிட்டுச் சொற்பகாலமேனும் வெளியேறி இயற்கைப்பொருள்களின் வனப்பையும் இயற்கை சம்பவங்களின் அழகையும் பார்த்தல் மநத்திற்கு உற்சாகத்தையுண்டாக்கும். மலைகளென்ன, அழகான காடுகளென்ன, அருவிகளென்ன, இவைபோன்றவைகளைப் பார்த்தால் தற்சமயமேனும், தன்னைமறத்தலுக்கு அநுகூலமாகும். பார்க்கப்படும் அவை மநத்தைக் கவர்ச்சிக்கும்படியான அழகுள்ளவைகளாக விருக்குமாகில் மெய்ம்மறந்து அவைகளின் அழகையே பாராட்டி மநம் ஒருமைப்பட்டு அந்நிலையில் நிற்பதாகும். இவ்விதமாய்ப் பல முறை ஒருவன் காலங்கழிப்பானாகில், ஏகதேசத்தில் மெய்யுணர்வு பெறுதலும் சம்பவிக்கும். ஒரு பெரியவர் சொல்லுகிறபடி, ஒரு வாரத்துக்கு ஒரு முறையேனும் தானிருக்கும் நகரத்தைவிட்டுப் புறம்பேகி ஏகாந்தம் கொள்க.

சி. வ.

273

(177-ம் பக்கத் தொடர்ச்சி.)

வணிகர் வேந்து சுமதியினிடத்தில் மையல் கொண்டவனாய் அவளை நோக்கி, "பெண்ணே! நீ யேன் வீணில் மநோராஜ்யம் பண்ணுகிறாய். உன் சகோதரன் எங்கே போனானோ, எந்தப் புலியின் வாயில் அகப்பட்டு இறந்தானோ, எந்தப் பள்ளத்தாக்கில் அவனை நாய் நரிகள், பேய் கழுகுகள் பிடுங்கித் தின்றுவிட்டனவோ. இந்நேரமாகியும் வராததைப் பார்த்தால் அவ்வாறே நினைக்கவேண்டியிருக்கிறது. பூவினும் மெல்லிய சரீரத்தை இக்கொடிய கல்லாந் தரையில் வீணில் போட்டு ஏன் துன்புறுகிறாய், என்னுடன் கூடவா; நான் இந்த வணிகர் கூட்டத்துக்கு வேந்தன். இரண்டொரு நாள் பிரயாணத்தில் என்னுடைய அழகிய நகரமிருக்கின்றது. அதில் உந்நத உப்பரிகைகளையுடைய பல அரண்மனைகளும் உத்தியானவனங்களும் அதன்கண் ஸ்படிகம் போன்ற வாவிகளும் உண்டு, பொழுது போக்குக்கு அநேக மான்களும், கிளிகளும், மயில்களும் உண்டு. உன் பிராய மங்கையர்களும் பலருண்டு. அவர்களுடன் கூடிக் குலாவிக்களித்து இன்புற்றிருக்கலாம். வீணில் இந்த நிர்மாநுஷ்யமான காட்டில் ஏன் கிடந்து துன்புறுகிறாய். உனக்கு வேண்டிய சௌக்கியங்களை யெல்லாம் நீ ஆங்கு அடையலாம். உன் பிதாவின் வீட்டிலும் அவ்வாறான சுகவாழ்வைக் கண்டிருக்கமாட்டாய். உன் முகமோ தாமரையைப் பழிக்கின்றது. உன் புருவமோ வில்லைப் பழிக்கின்றது. கண்களோ நீலோற்பலங்களைப் பழிக்கின்றன. அதரமோ பவளத்தைப் பழிக்கின்றது. பற்களோ முத்துக்களின் வரிசையைப் பழிக்கின்றன. கழுத்தோ சங்கத்தைப் பழிக்கின்றது. கூந்தலோ கருமேகத்தையும் கடலின் கருமணலையும் பழிக்கின்றது. உன் வடிவோ சுவர்ணத்தை உருக்கி வார்த்தாற்போ லிருக்கின்றது." என்று இச்சக மொழிகளைக் கூறவே, சுமதி தன் துக்கத்தைச் சிறிது மறந்தவளாய்ப் பகவத்தியானம் செய்து எழுந்திருந்து, "அடா, பதரே! நீ நற்குடிப் பிறந்தவனாகத் தோற்றவில்லை. துர்ப்புத்தியால் ஏதோ பைத்தியங்கொண்டு பிதற்றுகிறாய். வீணில் பழி பாவத்துக்கு உள்ளாகாதே. பிற மாதர்களைத் தாய்போலவும் சகோதரிபோலவும் கருதவேண்டியிருக்க, ஏதோ கர்ண கடூரமான மொழிகளைக் கூறுகின்

ளுய். ஏதோ அநாதையாய் இக்காட்டில் யான் இருப்பதாக நினை த்து இக்கடுமையான மொழிகளைச் சொல்லத் துணிந்தாய். ஆதி யில் தனிமையாய் என்போல் வநத்தில் வழிதப்பிச் சென்ற தமயந் தியை ஒரு வேடன் காதலித்துச் சாம்பராய் அழிந்ததை அறியா யோ. கபட சந்நியாசி வேஷம் பூண்டு திருட்டுத்தனமாய் ஒருவரு மில்லாத சமயத்தில் ஆச்சிரமத்தில் நுழைந்து சீதாதேவியைத் தூக்கிச் சென்ற இராவணன் பட்டபாட்டைக் கேட்டதில்லையோ. திரௌபதையின் மாநத்தைக் குலைக்க முயற்சித்த துரியோதநாதிகள் அடியோடே மாண்டதை அறியாயோ. பெண் மோகத்தால் இந் திர சந்திராதிகள் உலகமுள்ளளவும் அடைந்த பழியை மறந்தனை யோ. துர்ப் புத்தியால் வீணில் கெட்டழிய வேண்டாம். பிரா ணனை விட்டாகிலும் மாநத்தைக் காப்பாற்றுவதே உத்தம குலப் பெண்களின் விருது. இக்காட்டில் என் சகோதரன் திரும்பி வந்தா லும் சரி, வராவிடினும் சரி, வந விலங்குகளுக்கு மத்தியில் என் பிராணனைக் கொடுக்கச் சித்தமா யிருக்கிறேன். உன் உதவி எனக் குச் சிறிதும் வேண்டுவதில்லை, நீ உன் பாட்டைப் பார்த்துக்கொண்டு போ. வீணில் துர் எண்ணத்தால் பழிக்குள்ளாகாதே" என்று அக் கொடியவனைக் கண்ணால் பார்க்கவும் கூசித் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டனள். அந்தத் துராத்துமாவோ மதிமயக்கம் நீங்காதவனாய் அவளது பின்னழகைக் கண்டு தேன்வீழ் ஈயை ஒத்து நின்றான். தன்னால் கூடிய சாமர்த்தியத்துடன் அவள் மநத்தைத் திருப்ப முயன்றான். அவள் மநமோ வைரத்தினும் உறுதியாயிருந்தது. "காவல்தானே பாவையர்க்கழகு" என்ற வண்ணம் தன் மநோ தைரியமே தன் காவலாகச் செய்துகொண்டு அத்துஷ்டனைக் கண் ணெடுத்துப் பாராமல் நிலத்தை நோக்கிய வண்ணமாய் நின்றாள். அத்துஷ்டனோ மன்மதனால் பீடிக்கப்பட்டுப் பின்னும் பேசத் தொ டங்கினான். "நங்காய்! உன் புஷ்பம்போன்ற சரீரத்தை நீ வீணில் கெடுத்துக்கொள்ளுகிறாய். மானுடர் வாழ்வோ சொற்ப காலமுள் ளது, அதில் இளமைப்பருவமோ மிகவும் சொற்பம், அதிலும் பிணி முதலிய துன்பங்கள் நேரிடின் யாதொரு சுகமும் கிட்டுவதரிது. "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளல் வேண்டும்" யௌவநம் எல்லாம் வீணில் விரயம் செய்வதில் யாது பயன்? "நாளல்ல

நாள் பூத்த நன்மலரும் போலுமே, ஆளில்லா மங்கைக் கழகு" என்பதை நீ வாசித்ததில்லையா. நீ காட்டு ரோஜாவாக நின்று வன் வீணில் காற்றில் உன் வாசனையை எல்லாம் பயனற்றதாகச் செய்கிறாய். பெண்கள் என்றும் தனியே வசித்தல் தகாது. "துணையோடன்றி நெடுவழி யேகேல்" என்றும் நீதியுண்டு. நாங்கள் போய்விடும் பக்ஷத்தில் உனக்குத் துணை யார்? நீயோ தாய் தகப்பனையும் சகோதரனையும் இழந்தவளாகிறாய்; நான் இனி உனக்கு அருந்துணையாய் நிற்பேன். நற்குலத்துப் பெண்கள் யௌவன காலத்தைக் கணவனின்றிக் கழிக்கலாகாது. கடவுள் இந்த லோகத்தில் எல்லாப் பதார்த்தங்களையும் மனுஷனுடைய சுகத்துக்காகவே படைத்திருக்கின்றனர். ஸ்திரீ புருஷர்கள் இவ்வுலகிலுள்ள சுகங்களை அநுபவியாமல் வீண் தர்க்கங்கள் பேசி அச்சுகங்களை அநியாயமாய் இழக்கிறார்கள். அது முற்றிலும் மூடத்தனமே. புருஷனாவது கல்யாணமின்றி இருக்கலாம், ஸ்திரீகள் விவாகம் இல்லாமல் ஒரு நிமிஷமாவது இருக்கலாகாது. வீண் யோசனை செய்யாதே. என்னுடன் கூடவா; உன்னை என் பட்ட மகிஷியாக்கி உயர்ந்த சுகத்தில் வைத்துக் காப்பேன், மாந்தளிர்போன்ற அழகிய சரீரத்தை வீணில் வாடச் செய்யாதே. சிறு பெண்ணானதால் உனக்கு லோகாநுபவம் போதாது, நன்றாய் ஆலோசித்துப் பார், கைக்கெட்டிய பழத்தை விட்டுவிடாதே. யாதொரு கவலையுமின்றி வாழும்படி உன்னை உயர்ந்த சுகத்தில் வைப்பேன். உனக்கு அடிமையாய் நின்று நீ காலாலிட்ட வேலையைத் தலையால் முடிப்பேன். இது சத்தியம். பெண்ணணங்கே! நீ சிறிது கருணைசெய், நான் உன்னை மணம்புரிந்து கொள்வேன். நீயே என் ஆஸ்திக்கெல்லாம் தலைமையாயிருந்து வேண்டிய வண்ணம் சகல போக போக்கியங்களையும் அநுபவி" என்று இன்னோரன்ன பசப்பான வார்த்தைகளைப் பேசி மயக்கத் தன் சாமர்த்தியத்தை எல்லாம் காட்டினான்.

சுமதியோ உத்தம ரஜபுத்திரவம்சப்பெண். இம்மொழிகள் எல்லாம் அவள் காதில் நாராசம் காய்ச்சிவிட்டதுபோலிருந்தன. அவள் அத்துஷ்டனைக் குறித்துப் பின்வருமாறு பேசலானாள்:—"துஷ்டா! என் துஷ்டவார்த்தைகளைப் பிதற்றுகின்றாய்" விநாசகாலத்தில் விபரீதபுத்தி தோன்றுகிறதுபோலும், என்ன கஷ்டப்பட்டபோதிலும்,

நற்குடிப்பிறந்த பெண்கள் குலதர்மத்தைக் காப்பாற்றவேண்டியது. அவர்களுக்கு அதனினும் பூஷணம் வேறு கிடையாது. பெரியோர்களது வரைக்கு உட்பட்டு நடத்தலே அவர்கள் கடமை. மநம் போன போக்கெல்லாம் போதல்கூடாது. புருஷன் கெட்டுப்போனால் அவனுடன் அக்கேடு நிற்கும். குடும்பகௌரவத்தைக்கெடுக்காது. பெண்ணே தவறி நடக்கும்பக்ஷத்தில் குல ஒழுக்கத்தை முற்றிலும் கெடுத்தவளாவாள். நான் க்ஷத்திரியகுலம். நீயோ வணிகக்குலம். உத்தம குலத்துக்குரிய நடத்தை உன்னிடத்தில் கிடையாது.வீணில் வார்த்தையைச் சிதறவேண்டாம். விவாகம் என்பது தெய்வசங்கற்பமான ஓர் உயர்ந்த புண்ணிய கர்மம். அதனை நீ இவ்வாறு காமமயக்கத்தால் இலேசாக நினைக்கவொண்ணுது. தாய் தகப்பன், சகோதரர், உற்றார் பெற்றார் முதலியோருடைய அநுமதியின்றிப் புருஷனாவது, பெண்ணாவது விவாகத்துக்கிசைதல் அழகன்று. க்ஷத்திரியர்களுக்குள் காந்தர்வ விவாகம் ஏற்பட்டிருப்பினும் அது கடைமுறையேயாகும். காதலன் காதலி இருவருடைய மனவொற்றுமையுடன் ஒத்த குலமும் ஒத்த பருவமும் ஒத்த அழகும் சேர்ந்திருந்தாலொழிய அதுவும் குற்றமேயாகும். எந்த விஷயத்திலும் நம்மிருவருக்கும் ஒற்றுமையில்லை, ஆகையால் நீ வீணிற் கெட்டுப்போகாதே. உன் வழியை நோக்கிச்செல். தெய்வம் எனக்குத் துணைநிற்கும் என்னைப்பற்றிச் சிறிதும் கவலையுறல் வேண்டாம் என்று திக்காரம் செய்தனள்.

அவ்வுத்தமி இவ்வாறு கூறவே அவ்வணிகன் காமவெறிகொண்டவனாய்த் தான்செய்யும் காரியம் இன்னதென்று சிறிதுஞ் சிந்தியாமல் அவ்வணங்கைத்தூக்கிப் பல்லக்கில் வைத்துக்கொண்டு தன் ஊருக்குக் கொண்டுபோய் விட்டான். சுமதியோ கண்ணுங்கண்ணீருமாய் அலறியும் புரண்டுவிழுந்தும் பயனில்லை. அச்சமயத்தில் அவள் தன் குலதெய்வத்தைப் பிரார்த்தித்துக்கொண்டு கூட்டில் அகப்பட்ட கிளிபோலவும் வலையில் அகப்பட்ட மான்போலவும் துன்பப்பட்டுக் கொண்டுபோயினள்.

தன்னூர்போய்ச்சேர்ந்த வணிகன் சுமதியை ஓர் உத்தியாநவநத்தின் மத்தியிலுள்ள ஒரு மாளிகையிற்கொண்டு சிறைவைத்

தான். ஒவ்வொரு நாளும் அவ்வுத்தியாந வநஞ்சென்று அவளைப் பலவிதமாய் இணக்கமுயன்றும் முடியவில்லை. வைரத்தை இரும்பு பிளக்குமா? உத்தமகுலத்துப்பெண்களை மூடர்கள் எவ்வித உபாயத்தாலும் மேற்கொள்ளமுடியாது. சந்திரகாந்தக்கல் உருகச் சந்திர பிம்பம் அன்றோ வேண்டியது. இவ்வியற்கை உண்மையையறியாத வணிகன்பலபாடுபட்டும் எல்லாம் விழலுக்கிறைத்ததாயிற்று. அவன் வேறொரு உபாயம் செய்யக்கருதினான்.

அவ்வூரில் ஒரு கணிகையுண்டு. அவள் அநாதைகளான குலப் பெண்களைத் தேடிக் கண்டுபிடித்துச் சிறு பிராயத்திலேயே அவர்களைத் தன் கணிகைத்தொழிலுக்குப் பழக்குவது வழக்கம். அவ்வேலையில் அவளினும் சாமர்த்தியமுள்ளவள் ஒருவரும் கிடையாது. ஆகையால் அவ்வணிகர்வேந்து அக்கணிகையைத் தருவித்து அவளிடம் நம் சுமதியை ஒப்புவித்துத் தன் நோக்கத்துக்கு இணங்கச்செய்யப் பழக்கும்படிக்கும், அவ்வாறு பழக்கி இணங்கச்செய்யும் பக்ஷத்தில் வேண்டிய பொருள்கொடுப்பதாகவும் சொன்னான். பணத்துக்கு ஆசைப்பட்ட அக்கணிகை அவ்வாறே செய்வதாக வாக்களித்து அடிக்கடி அவ்வுத்தியாந வநத்துக்குப்போய்ச் சுமதியுடன் பேசிக்கொண்டிருப்பது வழக்கம். சுமதி அவளைக் கணிகையென்று அறியாள். அவளுடைய நடையுடைபாவனையும் சுமதிக்குப்பிடிக்கவில்லை. தன்னந்தனியாய் உத்தியாந வநத்திலிருந்தபடியால் பொழுதுபோக்குக்காக வலுவில் வந்துபோகும் அக்கணிகையினிடம் பொதுவாக ஏதாவது பேசுவாள். அநேகமாய் அக்கணிகை சொல்லும் விசித்திர கதைகளைக் கேட்கப் பிரியப்படுவாள். சிற்சில சமயங்களில் அவள் பாடுவதைக்கேட்டுச் சுமதி அவளிடம் பிரியங்காட்டுவாள். சங்கீதத்தில் சுமதிக்கு நல்ல ஞாநமிருந்தாலும் அக்கணிகையும் நன்றாய்ப் பாடினபடியாலும், இருவருக்கும் சிநேகம் சிறிது அதிகரித்தது. இவ்வாறு சில நாட்கள் சென்றபின்னர் அக்கணிகை சுமதியைப் பார்த்துப் பின் வருமாறு உபந்நியஸிக்கத் தொடங்கினாள்.

“ நங்காய், சுமதி! நீ நற்குணமுள்ளவளாயிருக்கிறாய். உன் குணஅழகுமேலோ, உன் வடிவழகுமேலோ, என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. உன்னுடைய பருவமோ மிகவும் இளமை. உனக்கு சங்கீதத்தில் இருக்கிற ஞாநமோ கந்தர்வ ஸ்திரீகளுக்கும்

இல்லை. எல்லாவிதத்திலும் நீ மேன்மையடைந்திருக்கிறாய். ஸ்திரீகள் யௌவநத்தை வீணில் வாடிப்போகும்படி விடலாமா? உனக்கோ ஒரு நாதனையும் காணோம். நீ விவாகமில்லாமலிருப்பது எனக்குப்பரிதாபமாயிருக்கிறது. உன் மநத்தின்கண் உண்டாகும் விகாரங்களையெல்லாம் நீ வாய்விடாமல் மறைத்துவைப்பதிற் பயனென்ன? நான் உனக்கு உற்ற தோழி, என்னிடம் நீ தாராளமாய் எதையும் சொல்லலாம். நான் உனக்கு வேண்டிய உதவிசெய்து உன்னை ஒரு தநவானுக்கு மணம்புரிவிப்பேன். இந்த உத்தியாநவநத்துக்குரிய வணிகன் மகா தநிகன். அவன் உன்னைக் கொணர்ந்து இவ்விடம் வைத்து எத்தனையோ அன்போடும் சிரத்தையோடும் காப்பாற்றி வருகிறான். உன் மநம் கோணாமல் நடக்கும் அவனுக்கு நீ யாது கைம்மாறு செய்யப்போகிறாய்? அவனோ மகா செல்வாக்குள்ளவன். உன் இஷ்டப்படி நடக்க எதையும் செய்யச் சித்தனாயிருக்கிறான். அவனிலும் அழகும் இடம் பொருள் ஏவலும் படைத்தவர்கள் உனக்கு யார் கிடைக்கப்போகிறார்கள்? நான் சொல்வதைச் சற்றுச் செவி சாய்த்துக்கேளம்மா! நீ சிறு பெண், உனக்கு அநுபவம் சிறிதும் கிடையாது, பின்னால் நீ மிகவும் வருந்தநேரிடும். ஆகையால் சிறிதும் தாமதியாதே, "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள், கரும்புள்ளபோதே ஆலையாடிக்கொள்" வீண் மனோராஜ்யம் பண்ணாதே. உன் உற்றார் பெற்றாரை நீ ஒருபோதும் காணமுடியாது, உன் தமையன் இதுவரையிலும் உன்னைத்தேடி வராததால் கட்டாயம் இறந்தே இருக்கவேண்டும். ஏன் வீணில் இந்த அழகிய தேகத்தை வாட்டிவதக்குகிறாய்? மன்மதனும் உன்னைக்கண்டு மயங்குவானே. இந்த வணிகர் வேந்து இத்தனை நாளாக உன்னைச் சும்மா விட்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. பெண் ஜன்மமாகிய நானும் உன்னைக் கண்டவுடன் மயங்கினேன் என்றால், பிறர் மயங்கக்கேட்பானேன். சற்று நிதானித்து யோசித்துப்பார். இளமைப்பருவத்திலேயே இவ்வாறு விரதங்கள் கொண்டால் பயனென்ன. அப்பருவம் இன்பம் அநுபவிக்கவே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. என் போன்றவர்கள் நினைத்த வண்ணம் இன்பங்களை அநுபவித்தும் இன்னும் தெவிட்டவில்லை. எங்கள் குலம் கணிகையர் குலம், அவ்வாறு நீ இருக்கவேண்டுவதில்லை. (இன்னும் வரும்.)

எஸ். சாமிநாதையர்.

வெயிலில் அலைகிறவர்களுக்கு சூரிய ரஸ்மியால் காய்ப்புண்டு மூர்ச்சை மயங்கியும் சிற்சில சமயங்களில் அவர்களுக்குப் பிராண ஹானியும் சம்பவிக்கக் கூடியதாயிருக்கிறது. நல்ல குதிரைகள் சூரியவெப்பம் தாங்காமல் சுருண்டு விழுந்து மாய்கிறது முண்டு. இதைத் தடுக்கச் சிவப்பு உருமால் கட்டுதலும், சிவப்புத் தொப்பி போடுதலும், நலமென்று ஒரு அறிஞர் கண்டுபிடித்து அநுபவவசித்தமாய் ருசுப்படுத்தி யிருக்கிறார்.

"சுவர்ணமணிமாலை" என்ற சங்கம்:—இது குழந்தைகள் அன்பின் வழியில் அமைதலுக்கு உற்ற சங்கம்.

வாழி, நேசி, சுகி.

ஒவ்வொரு குழந்தையும் அடியில்வருமாறு நிதம் ஒருமுறை சிந்தனை செய்யவேண்டுவது.

(1) இவ்வுலகத்தைச் சூழ்ந்திருக்கும் அன்பாகிய சுவர்ணமணிமாலையில் நான் ஒரு மணியாய் உள்ளேன், என் மணி பளபளப்பாயும் உறுதியாயும் இருக்கற்பாலது.

(2) அதனால் எனக்கு எதிர்ப்படும் எவ்வுயிரையும் அன்பாகவும் ஆதரவாகவும் நடத்த முயலுவேன். என்னின் மெலியாரைக் காப்பாற்றவும் அவர்க்கு உதவிபுரியவும் முயலுவேன்.

(3) மாசற்றவும் அழகானவுமான சிந்தனைகளைச் சிந்திக்கவும், மாசற்றவும் அழகானவுமான சொற்களை வசிக்கவும், மாசற்றவும் அழகானவுமான கர்மங்களைச் செய்யவும், நான் முயலுவேன்.

(4) நல்லவனாய் ஒழுகுவேன். பிறர் நலம்பெற வாழ்வேன்.

(5) இம்மாலையின்கண் உள்ள ஒவ்வொரு மணியும் என்றும் பளபளப்பாயும், உறுதியாயும் ஆகவேண்டுமென விரும்புவேன்.

கே. எம். ராமஸ்வாமி அய்யர் B. A. என்பார் மரணம். நமது ஞானச்சோதரர் பிரஹ்மஸ்ரீ இராமஸ்வாமி அய்யர் அவர்கள், சென்றமீ 15வ சாயங்காலம் 6½மணிக்கு தேகவியோகமானார். மரணத்திற்கு இரண்டுநாள் முன்வரை பிரஞ்ஞையுடன் பேசிக்கொண்டிருந்தார். அவர் கடைமுறையில் வசித்த வார்த்தைகள் மிகவும் நலமுள்ளன. "நான் பிரஹ்மஞான சபையின் புத்தகங்களைப் படித்து அறிந்ததினால், எனக்கு மரணபயம் இல்லை. மரணம் என்பது ஒரு ஊரினின்று மறு ஊருக்குப் போவது போன்றதாம். நான் திருப்தியாக இருக்கிறேன், கவலை எனக்கில்லை. சென்ற வருஷத்தின் ஜனவரிமீ 1வயின் கிரகங்களின் அமைப்பால், ஒரு மஹாபுருஷன் அவ

தாரம் ஆகவேண்டியகாலம் சம்பவித்திருக்கிறது. அவர் வெளித்தோன்றுவர். அவரை வழிபட ஜநங்கள் ஆயத்தம் செய்துகொள்ளவேண்டும்.'' தன் ஜேஷ்ட புத்திரனையும், மாப்பிள்ளைகளையும் பார்த்த, "நீங்கள், பிரஹ்மஞான சபையைச் சேருங்கள். அதன் இலக்கியங்களைப் படியுங்கள். அவைகள் மிகப் பயன்படும்.'' சுமார் 20 வருஷத்திற்கு மேலாக டிஸ்டிரிக்கட்டு கோர்ட்டு வைக்கிலாக இருந்து திரவியம் சம்பாதித்தார். பெருகிய சந்தாநமுள்ளவர். ஈகையுள்ளவர். பொதுநலப்பிரியர். மதுரை பிரஹ்மஞான கிளைச்சபையின் அதிக அபிமாநமுள்ளவர். மரணகாலத்தில் அவருக்கு வயது 51. புவர்லோக சுவர்க்கலோக அநுபவங்கள் முடிந்து சீக்கிரம் சபையின் தொழிலை இனி அதிக தீவிரமாக நடத்த மறுபடி திரும்புவர். மறுமையின் அநுபவங்கள் அவருக்குச் சுகமாக நடைபெறுவனவாக.

பழைய கவர்னர் போதல், புது கவர்னர் வருதல்:—கனம் தங்கிய ஸர். ஆ. லாலி அவர்களான நமது சென்னை இராஜதானி கவர்னர் நாளிது ஸ்ரீ 3உ தம்முடைய ஆளுகை முடிந்தமையால், சென்னையை விட்டு தம் தேசத்திற்கு பிரயாணமானார். நாளிது ஸ்ரீ 1உ புது கவர்னரான கனம் தங்கிய ஸர். ஜெ. ஜிப்ஸன் கார்மிக்கேல் அவர்கள் சென்னைக்கு விஜயமாகி, நாளிது ஸ்ரீ 3உ இந்த ராஜதானியின் அதிகாரத்தை வகித்தார்.

ஹிந்து ஸர்வகலாசாலை:—மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார் சென்றஸ்ரீ 6உ சீமையிலிருந்து சென்னைக்கு வந்தார்கள். சொற்பகாலம் அவ்விடம் தங்கியிருந்து, சென்றஸ்ரீ 22உ காசிமாநகரத்திற்குச் சென்றார்கள். காசிநகரத்தின்கண்ணுள்ள ஹிந்து வித்தியாசாலையை நடுநாயகமாக வைத்து, ஹிந்து ஸர்வகலாசாலையை ஏற்படுத்துவதாக, பிரஹ்மஸ்ரீ மதன்மோகன் மாளவ்வியர் அவர்களும், பிரஹ்மஸ்ரீ தர்பங்க மகாராஜாவும், மாதுஸ்ரீ பெஸண்டு அம்மையாரும், ஏகோபித்துத் தீர்மாநம் செய்திருக்கிறார்கள். சீக்கிரம் இறைவன் அருளால் இந்த விஷயம் உறுதிப்படுமென்று நாம் நம்புகிறோம்.

விக்டோரியா எட்வார்டு சாஸ்வதீ விலாஸம்:—இப்பெயர்கொண்ட புத்தகசாலையும், பொதுஜந சபாமண்டபமும், நம்மதுரைமாநகர்க்கு நிர்மாணம் செய்கிறதாக, தீர்மானம் செய்யப்பெற்று அதன் சங்கஸ்தாபநம் நாளிது ஸ்ரீ 11உ சாயங்காலம் 5 மணி, 30 நிமிஷமான நல்லவேளையில் கனம் தங்கிய பிரஹ்மஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் செய்திருக்கிறார்கள். மேற்படி கட்டிடம் சீக்கிரம் முடிவுபெற்று, ஜநங்களுக்கு உபகாரமானதாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.